விலை: 60.00
பக்கங்கள் : 20
website : www.valampurii.lk
viber : 076 636 3378
E-mail: valampurii@yahoo.com
Registered as a Newspaper in Srilanka

EDUS www.edushuttar.com ✆ 077 488 7774
G.C.E A/L 2026
கணித விஞ்ஞான பிரிவு மாணவர்களுக்கான
புதிய ஒன்லைன்
வகுப்புக்கள் ஆரம்பம்..!
COM.MATHS | BIOLOGY | PHYSICS | CHEMISTRY | ICT
Tamil & English Medium
25.05.2024
(C-0450)
Quality learning | Guaranteed Results | Professional Service | EDUS
ஒன்லைன் கற்பித்தலில் இலங்கையின் முன்னணி ஆசிரியர்களுடன் உங்கள் சாதனைப் பயணத்தை ஆரம்பித்திடுங்கள்.

# வலம்புரி
## சங்குநாதம்

சங்கு 25
ஒலி 159 வள்ளுவர் ஆண்டு 2055 வைகாசி 12 ஞாயிற்றுக்கிழமை (26.05.2024) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

### ஜனாதிபதித் தேர்தலில்
## தமிழ் மக்கள் அறிவுபூர்வமாக தீர்மானிக்க வேண்டும்
### நாமல் எம்.பி தெரிவிப்பு



(மட்டக்களப்பு)

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் மக்கள் அறிவுபூர்வமாகத் தீர்மானம் மேற்கொள்ள வேண்டும் என நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பில் கட்சி உறுப்பினர் 19

## சிங்களத் தலைவர்களும் வெளிநாடும் புரிந்து கொள்ள
### பொதுவேட்பாளரை நிறுத்தப் போகின்றோம் ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு

(கிளிநொச்சி)

சிங்களத் தலைவர்களும் வெளிநாடுகளும் புரிந்து கொள்ள ஜனாதிபதித் தேர்தலில் பொது வேட்பாளரை நிறுத்தப் போகின்றோம் என ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அறிவித்துள்ளது.

ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் கூட்டம் கிளிநொச்சியில் நடைபெற்றது.

குறித்த கலந்துரையாடலில் ஈழமக்கள் புரட்சிகர 19

# ஜனாதிபதித் தேர்தலில்
# பொது வேட்பாளர்
## யாழில் விக்னேஸ்வரனிடம் நேரில் கேட்டறிந்த ஜனாதிபதி ரணில்

(யாழ்ப்பாணம்)

சமகால அரசியல் விடயங்கள் ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் பொது வேட்பாளர் தொடர்பான விடயங்களை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க விக்னேஸ்வரன் எம்.பியிடம் நேரில் கேட்டறிந்து கொண்டார். (19ஆம் பக்கம் பார்க்க)



## அரிசி உற்பத்தியில் நாடு தன்னிறைவு
### ரணில் பெருமிதம்

(கிளிநொச்சி)

சுமூகமான அரிசி உற்பத்தியால் நாடு தன்னிறைவு அடைந்துள்ளதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சியில் நேற்று இடம்பெற்ற மக்களுக்கு காணி உரிமைகளை வழங் 19

## யாழிலிருந்து பயணித்த ரயிலுடன் மோதுண்டு
### தாய், குட்டி யானை பலி

(முறிகண்டி)

யாழில் இருந்து வவுனியா பயணித்த புகையிரதத்தோடு மோதி தாய் யானையும் அதன் குட்டியும் பலியாகியுள்ளது.

மாங்குளத்திற்கும், புளியங்குளத்திற்கும் இடைப்பட்ட பகுதியில் குறித்த சம்பவம் நேற்று மாலை இடம்பெற்றுள்ளது. (ம-7,10,100)

## அர்த்தமுள்ள அதிகாரப் பகிர்வில் நாங்கள் ஆர்வமாக உள்ளோம்
### ரணில் முன் சுமந்திரன் எம்.பி வலியுறுத்து



(கிளிநொச்சி)

வடக்கின் அபிவிருத்திகளை வரவேற்கும் அதே வேளை நாம் அர்த்தமுள்ள அதிகாரப் பகிர்விலேயே ஆர்வமாக உள்ளோம் என பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி மாவட்ட மக்களுக்கு காணி 19

### யாழ்.போதனா வைத்தியசாலையில்
### பாதுகாப்பு உத்தியோகத்தர்களுடன்
## முரண்பட்ட மூவர் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்குள் மது போதையில் நுழைந்து பாதுகாப்பு உத்தியோகத்தர்களுடன் முரண்பட்டு குழப்பத்தில் ஈடுபட்ட மூவர் நேற்று கைது செய்யப்பட்டனர்.

வைத்தியசாலையில் நோயாளிகளை பார்வையிடும் நேரம் முடிந்த பின்னர் தம்மை உள்நுழைய அனுமதிக்குமாறு பாதுகாப்பு உத்தியோகத்தர்களுடன் முரண்பட்டு குழப்பத்தில் ஈடுபட்டவர்களே இவ்வாறு 19

## மீனவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினை தொடர்பாக
### யாழில் விசேட கலந்துரையாடல்
### தமிழ் எம்.பிக்களும் பங்கேற்பு

(யாழ்ப்பாணம்)

வடமாகாண கடற்றொழிலாளர் எதிர்நோக்கும் பிரச்சினைகள் மற்றும் அரசினால் கொண்டுவரப்படவுள்ள மீன்பிடி சட்டதிருத்த வரைபு சம்பந்தமாக வடக்கின் பாராளுமன்ற உறுப்பினர்களது ஆலோசனைகளையும் கருத்துக்களையும் கேட்டறியும் முகமாக கலந்துரையாடல் யாழில் உள்ள தனி 19

## ஐ.பி.எல் இறுதிப் போட்டி இன்று
### கொல்கத்தா – ஹைதராபாத் பலப்பரீட்சை



## கிளிநொச்சியில் இளைஞர்களுடன் ஜனாதிபதி கலந்துரையாடல்

(கிளிநொச்சி)

இளைஞர்கள், தொழில் முனைவோருடன் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கலந்துரையாடலில் ஈடுபட்டார்.

குறித்த கலந்துரையாடல் நேற்று பிற்பகல் 2.30 மணியளவில் கிளிநொச்சி நெலும்பியச மண்டபத்தில் இடம்பெற்றது.


இதன்போது, கிளிநொச்சி மாவட்டத்தில் இளைஞர்கள், தொழில் முனைவோர் எதிர்கொள்ளும் சவால்கள் தொடர்பில் ஜனாதிபதி கேட்டறிந்ததுடன், தீர்வுகளையும் முன்வைத்தார்.

குறித்த கலந்துரையாடலில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, அமைச்சர் டக்ளஸ் தேவா 19



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 24.09.1947 | 23.05.2024 |

## அருளானந்தம் கீதபொன்கலம் (கீதன்)

ஊறணி காங்கேசன்துறையைப் பிறப்பிடமாவும் வாழ்விடமாகவும் கொண்டு இடப்பெயர்வின் பின் சீந்திப்பந்தல் இளவாலையை வசிப்பிடமாகவும் கொண்ட திரு. அருளானந்தம் கீதபொன்கலம் (கீதன்) அவர்கள் (23.05.2024) அன்று இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற மல்லிகாமரினி அவர்களின் பாசமிகு கணவரும் காலஞ்சென்ற அருளானந்தம் - திரேசம்மா தம்பதியினரின் அன்பு மகனும் காலம்சென்ற மதுரகுணசீலி மற்றும் றெஜினா சொர்ணமலர் (சற்குணம்), யசிந்தா றோசறி, ஸ்டீபன் இன்பநாதன் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு சகோதரனும் அருட்தந்தை C.J அன்ரனிபாலா அவர்களின் அன்பு மைத்துனரும் யூடித்மங்களமரி (மங்களா), யூட் வசீகரன் (வசீ, இரணப்பாலை), பேர்னாட் ராஜகரன் (பிரான்ஸ்), கிறேஸ் கௌரி (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும் வின்சன் விஜயகுமார், டிலோஜினி (கிராம அலுவலகர், புதுக்குடியிருப்பு), மெடோனா (பிரான்ஸ்), றதீஸ்குமார் (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனாரும் வர்ணவி, கனியமுதன், டிலோன்சி, குயின்சி, கியூட்சி, குயின்றொசி, ஆரமுதன், ஆராதனா, ஆஷிகன்,ஜஸ்மின், டிவைனா, கிறிஸ்ரீனா ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் சீந்திப்பந்தல் இளவாலையிலிருந்து (27.05.2024) அன்று மதியம் ஊறணிக்கு எடுத்துச் செல்லப்பட்டு ஊறணி புனித அந்தோனியார் ஆலயத்தில் மாலை 03.30 மணிக்கு இரங்கல் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு புனித அந்தோனியார் கல்லறைத் தோட்டத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.


இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

ஊறணி
காங்கேசன்துறை

(872)

*தகவல்:*
குடும்பத்தினர்

# மரண அறிவித்தல்



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 17.04.1943 | 25.05.2024 |

## செல்லப்பா தவயோகநாதன்

பத்தமேனி அச்சுவேலியைப் பிறப்பிடமாகவும் ஆவரங்கால் வன்னியசிங்கம் வீதியை வதிவிடமாகவும் கொண்ட செல்லப்பா தவயோகநாதன் அவர்கள் இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லப்பா - நாகம்மா தம்பதியினரின் அன்பு மகனும் நவரத்தினம் - பாலஞானமணி தம்பதியினரின் அன்பு மருமகனும் காலஞ்சென்றவர்களான அன்னலஸ்மி, நமசிவாயம், சரஸ்வதி ஆகியோரின் அன்பு சகோதரனும் காலஞ் சென்றவர்களான தவமணிதேவி, நகுலேஸ்வரியின் அன்புக் கணவரும் நந்தன் (சிவசங்கரி அகம் ஆவரங்கால்), கவிதா (ஜேர்மனி), சத்தியசீலன் (கனடா), சிவசீலன் (ஆவரங்கால்), வனிதா (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தந்தையும் தவராணி காலஞ்சென்ற ஆன்றூட் றொபின்சன் (கண்ணன்), சிவநிதி, உமா, தர்மசீலன் (ஜேர்மனி), றஜனி (சுவிஸ்), ரகுமார் (முத்துத்தம்பி வித்தியாலயம் திருநெல்வேலி - ஆசிரியர்), ரவிக்குமார் (கனடா), றஜீபன் (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு மாமாவும் நாகேஸ்வரி (கனடா), சகுந்தலேஸ்வரி, பாலச்சந்திரன் (லண்டன்), ரவிச்சந்திரன் (பிரான்ஸ்), செல்லச்சந்திரன் (கனடா) ஆகியோரின் பாசமிகு மைத்துனரும் வாமதேவன் (கனடா), பாலச்சந்திரன், மதிவதணி (லண்டன்), கருணா (பிரான்ஸ்), கிருசா (கனடா) ஆகியோரின் சகலனும் கரிஸணன் (கிழக்கு பல்கலைகழகம்), மதுஸ்ணன் ஆகியோரின் பெரியப்பாவும் திவ்வியன், ஆர்சா, ஆர்சன், அக்சா, பானுசா, கபிசன், பாசறை, வாணன், சாலுதன், ஷருஜன், மேகனா, ரபீனா, ஆடேஸ் ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (27.05.2024) திங்கட்கிழமை காலை 9.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக ஆவரங்கால் கரதடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.


*தகவல்:*
குடும்பத்தினர்

(C-451)

# மரண அறிவித்தல்

## இராமுப்பிள்ளை கந்தசாமி (K.R. கந்தசாமி)

### (KRK, பிரபல வர்த்தகர் K.R கந்தசாமி அன்கோ வவுனியா, குமரன் அன்கோ யாழ்ப்பாணம்)



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 15.10.1940 | 25.05.2024 |

பாலாவோடை, களபூமி, காரைநகரைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் தற்போது திருநெல்வேலியை வசிப்பிடமாகக் கொண்ட இராமுப்பிள்ளை கந்தசாமி (K.R கந்தசாமி) அவர்கள் (25.05.2024) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தர் இராமுப்பிள்ளை - செல்லாச்சி தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான நவரத்தினம் - பரிமளம் தம்பதியினரின் அன்பு மருமகனும் அமுதமணியின் அன்புக் கணவரும் பேரின்பமலர், ஸ்ரீஹரன் (சிறைச்சாலை திணைக்களம், யாழ்ப்பாணம்), ஸ்ரீபரன் (சுகாதார அமைச்சு, வடமாகாணம்), ஸ்ரீதரன் (பிரதம செயலாளர் செயலகம், வடமாகாணம்), ஸ்ரீகுமார் (உரிமையாளர், குமரன் அன்கோ), சுதாகரன் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும் ராதிகா (யாழ். இந்து மகளிர் கல்லூரி), தர்சினி, சோபிகா ஆகியோரின் அன்பு மாமனாரும் காலஞ்சென்றவர்களான சின்னம்மா, தில்லையம்பலம், வேலுப்பிள்ளை, ஆறுமுகம், சுப்பிரமணியம், கந்தையா ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்றவர்களான காசிப்பிள்ளை, செல்லம்மா, தேவநாயகி, இராசமணி, யோகராசா மற்றும் யோகரட்ணம், தவமணி, நவமணி ஆகியோரின் அன்பு மைத்துனரும் மகிஷன், அபிலாஷ், கிரிஷிகா, கிரிஷன், கவின், அஸ்வின் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.05.2024) ஞாயிற்றுக்கிழமை காலை 08.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக காரைநகர் தில்லை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

*021 221 9193*
*077 148 8140 (தூன்)*
*077 335 9530 (குமார்)*
*077 459 8430 (பரன்)*
*077 652 8018 (ஸ்ரீ)*

*தகவல்:*
குடும்பத்தினர்
98/10 ,பலாலி வீதி,
திருநெல்வேலி.

(875)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## வீதிபாதுகாப்பு அரண்களுடன் மோதி டிப்பர் விபத்து

### கிளிநொச்சியில் சம்பவம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சியில் டிப்பர் வாகன மொன்று வேகக் கட்டுப்பாட்டை இழந்து விபத்துக்குள்ளானது.

கிளிநொச்சி மாவட்டப் பொது மருத் துவமனைக்கு முன்பாக நேற்று வீதியில் பயணித்த டிப்பர் வாகனம் வேகக் கட் டுப்பாட்டை இழந்த நிலையில் வீதி ஓரத்தில் வைக்கப்பட்ட பாதுகாப்பு அரண் களுடன் மோதி விபத்துக்குள்ளானது.

இவ் விபத்தில் டிப்பர் வாகனத்தின் முன்பகுதி கடுமையாக சேதமடைந்துள்ளதாக தெரிவிக்கப் படுகிறது.

விபத்து இடம்பெற்றதையடுத்து குறித்த பகுதியில் வாகன நெரிசல் ஏற்பட்டது.

இதனையடுத்து அங்கு வருகை தந்த பொலிஸார் வாகன நெரிசலை கட்டுப்படுத்தியிருந்தமை குறிப் பிடத்தக்கது. (நி-6-100)

## வாள்வெட்டுக்கு இலக்கான நபரொருவர் மருத்துவமனையில்

(மன்னார்)

மன்னார்- பேசாலை பொலிஸ் பிரிவிற்கு உட்பட்ட முருகன் கோவிலடி 7ஆம் வட்டாரப் பகுதியில் இடம் பெற்ற வாள் வெட்டுச் சம்பவத்தில் குடும்பஸ்தர் ஒருவர் பலத்த காயங்களுக்கு இலக்கான நிலையில் யாழ். மாவட்ட மருத்துவமனையில் அனுமதிக்கப்பட் டுள்ளார்.இந்த சம்பவமானது கடந்த 22 ஆம் திகதி புதன்கிழமை இரவு 9 மணிய ளவில் இடம்பெற் றுள்ளது.

வாள்வெட்டுச் சம்பவத்தில் காயம டைந்தவர் குறித்த பகுதியை சேர்ந்த 38 வயதுடைய மூன்று பிள்ளைகளின் தந்தை எனத் தெரியவருகிறது. சம்பவம் தொடர்பில் குடும்பத்தினர் கடந்த 23 ஆம் திகதி பேசாலை பொலிஸ் நிலை யத்தில் முறைப்பாடு செய்துள்ளனர்.

எனினும் வாள் வெட்டுச் சம்பவத்துடன் தொடர் புடைய எவரும் கைது செய் யப்படவில்லை என பாதிக்கப்பட்ட தரப்பினர் தெரிவித்தனர். (நி-6-285)

# தமிழர்களுக்கு ஒரு சட்டம் சிங்களவர்களுக்கு ஒரு சட்டமா?

### காணாமலாக்கப்பட்ட உறவுகளின் சங்கம் கேள்வி

(கிளிநொச்சி)

**யுத்த காலத்தில் இராணுவத்திடம் எமது பிள்ளைகளை எம் கையால் விசாரணைக்கு என ஒப்படைத்தோம். அவர்கள் காணாமல் ஆக்கப்பட்டு இன்றுவரையில் எமக்கான நீதி கிடைக்கப்பெறவில்லை என கிளிநொச்சி மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகள் சங்கம் தெரிவித்துள்ளது.**

கிளிநொச்சியில் நேற்று இடம் பெற்ற ஊடக சந்திப்பொன்றில் கிளி.மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கத் தலைவி சார்பில் கதிர்காமநாதன் கோகிலவாணி இதனைத் தெரி வித்துள்ளார். இவ்விடயம் தொட ர்பாக அவர் மேலும் தெரிவிக் கையில்,

கிளிநொச்சிக்கு விஜயம் செய் துள்ள ஜனாதிபதி ரணில் விக்கி ரமசிங்கவின் வருகைக்கு எதிர் ப்பு ஒன்றினை தெரிவித்து எதிர்ப்பு போராட்டம் ஒன்றை நிகழ்த்த திட்டமிட்டிருந்தது. ஆனால் அந்த போராட்டத்திற்கு நீதிமன்ற தடை உத்தரவு விதிக்கப்பட்டுள்ளது.

கடந்த யுத்த காலங்களில் உண்ண உணவின்றி உப்பு கஞ்சி குடித்து உயிரை காத்து கொண் டோம். அதனை சர்வதேசத்திற்கும் இலங்கை அரசாங்கத்திற்கும் எடுத்துக் காட்டும் முகமாக மே18 முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங் கப்பட்டு வந்தது.

குறித்த நினைவுக் கஞ்சிகளை இராணுவம் மற்றும் பொலிஸார் காலால்தட்டி சுகாதார கேடு என பலரை கைது செய்துமுள்ளனர்.

ஆனால் இன்று நாடுபூராகவும் வெசாக் பெருநாளை கொண்டாடி வருகின்ற போதிலும் அதில் இதுவரையில் எந்தக் குழப்பங்க ளும் இல்லை.

அப்படி என்றால் தமிழருக்கு ஒரு சட்டம் சிங்களவர்களுக்கு ஒரு சட்டமா? என கேள்விகள் எழுந் துள்ளதாகவும் இதன் காரணங் களுக்காகவே ஜனாதிபதியின் வரு கையை எதிர்த்து சர்வதேச நாடுகளுக்கு உணர்த்தும் வகை யில் ஊடகங்கள் வாயிலாக இத னைச் சுட்டிக்காட்டுகின்றோம் என அவர் மேலும் தெரிவித் தார். (நி-6-316)

### இணைப்பாடவிதான தேர்ச்சி ஊடாக

## மருத்துவ பீடத்திற்கு தெரிவான யாழ்.இந்துக் கல்லூரி மாணவன்

(யாழ்ப்பணம்)

யாழ் இந்துக் கல்லூரியைச் சேர்ந்த மாணவன் துஸ்யந்தன் பிரசாந்தன் என்பவர் இணைப் பாடவிதானச் செயற் பாடுகளில் வெளிப்படுத்திய திறமை ஊடாக மருத்துவ பீடத்திற்கு தெரிவாகியுள் ளார். பல்கலைக்கழகத் தெரிவிற்காக க.பொ.த உயர்தரப் பரீட்சையில் பிரதான மூன்று பாடங்களிலும் பெற்றுக் கொள் ளும் புள்ளிகளுக்கு Z புள்ளி கணிக்கப் படுகிறது. எனினும், மாணவர் ஒருவர்



இணைப் பாட விதானத்தில் வெளிப்படுத் திய திறமைகளுக்காக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மேலதிக Z புள்ளிகளை வழங்கி அவர்களுக்கு மேலதிக வாய்ப்பை வழங்கி வருகிறது.

இதனடிப்படையில், மூலக்கூறு உயி ரியல் பாடத்திற்கு தெரிவாகியிருந்த பிரசாந்தன் பல்கலைக்கழக மானியங் கள் ஆணைக்குழுவின் தேசிய மட்ட சாதனையாளர்கள் நேர் முகத்தேர்வின் பின்னர் ஊவா வெல்லச மருத்துவ பீடத்திற்கு தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

இந்த நிலையில் 2022 ஆம் ஆண் டில் யாழ்.மாவட்டத்தில் இருந்து 99 மாணவர்கள் மருத்துவ பீடத்திற்குத் தெரிவாகியுள்ளதோடு இருவர் விசேட வகையில் தெரிவு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-6)





## பெண்களுக்கான சிறப்பு சுகாதார நிலையம் ஜனாதிபதியால் கிளிநொச்சியில் திறந்து வைப்பு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்ட பொது மருத்துவமனையில் 5,320 மில்லியன் ரூபா செலவில் நிர் மாணிக்கப்பட்டுள்ள பெண்க ளுக்கான சிறப்பு சுகாதார நிலை யம் ஜனாதிபதி ரணில்விக்கிர மசிங்கவினால் நேற்றுக் காலை திறந்து வைக்கப்பட்டது.

ஜனாதிபதி ரணில் விக்கி ரமசிங்க 3 நாட்கள் வட மாகா ணத்திற்கு விஜயம்மேற்கொண் டுள்ள நிலையில் நேற்றுக் காலை கிளிநொச்சி மாவட் டத்திற்கு விஜயம் மேற்கொண்ட போதே பெண்களுக்கான சிறப்பு சுகாதார நிலையத்தை ஜனா திபதி திறந்து வைத்தார்.

நாடளாவிய ரீதியில் சுகாதார வசதிகளை மேம்படுத்துவதற் கான திட்டத்தின் கீழ் நெதர்லா ந்து அரசாங்கத்தின் உதவியு டன், அரசாங்கம் இந்தத் திட் டத்தை முன்னெடுத்துள்ளது.

இந்நிகழ்வில் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவா னந்தா, வடமாகாண ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸ், தமிழ் தேசிய கூட்டமைப்பின் பாராளு மன்ற உறுப்பினர்களான எம். ஏ.சுமந்திரன், தர்ம லிங்கம் சித்தார்த்தன், சுகா தாரத்துறை அதிகாரிகள், மருத்துவமனை பணியாளர் கள் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர். (நி-6-100)

## மாவட்ட செயலாளர்களை நியமிக்க விரைவில் நடவடிக்கை எடுங்கள்

### விக்னேஸ்வரன் எம்.பி ஜனாதிபதிக்கு கடிதம்

(யாழ்ப்பாணம்)

வடக்கில் மாவட்ட செயலா ளர்கள் மற்றும் அமைச்சுக் களுக்கான செயலாளர்களை விரைவில் நியமிக்க உடனடி நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதிக்குபாராளுமன்ற உறுப்பினர் சி.வி.விக்னேஸ் வரன் கோரிக்கை விடுத்துள் ளார்.

இதுதொடர்பில் விக்னேஸ் வரனால் ஜனாதிபதிக்கு அனு ப்பி வைக்கப்பட்ட கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதா வது,

யாழ் மற்றும் கிளிநொச்சி ஆகிய இரண்டு மாவட்டங்களி லுமுள்ள நிரந்தர மாவட்ட செயலாளர்கள் ஓய்வு பெற்று சுமார் 3 மாதங்களாகியும் நிரந் தர அரச அதிகாரிகள் நியமிக்கப் படவில்லை.

மேலதிக மாவட்ட செயலா ளர்கள் அந்த கடமைகளை உள்ளடக்கி உள்ளனர்.

தகுதியான தமிழ் சிறப்பு தர SLAS அதிகாரிகள் நிய மனத்திற்கு தகுதி இருந்தும் முக்கியமான பொதுப் பதவிக ளுக்கு இந்த மூத்த அதிகாரி களின் நியமனங்களை அரசியல் தடுக்கக் கூடாது.

எனவே நிரந்தர உத்தி யோகத்தர்களை மாவட்ட செயலாளர்கள் மற்றும் செய லாளர்களாக விரைவில் நியமிக்க ஜனாதிபதி நடவடி க்கை எடுக்க வேண்டும் என அக்கடிதத்தில் குறிப்பிடப் பட்டுள்ளது. (நி-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கம்மின்ஸ் 'ராசி' கைகொடுக்குமா? ஸ்ரேயாஸ் 'ஆசை' நிறைவேறுமா?

## பரவசமூட்டும் ஐ.பி.எல் பைனலில் கொல்கத்தா – ஹைதராபாத் இன்று மோதல்

சென்னை சேப்பாக்கம் மைதானத்தில் நடக்கும் 17வது ஐ.பி.எல்., தொடரின் பைனலில் கொல்கத்தா, ஹைதராபாத் அணிகள் இன்று மோதுகின்றன.

தகுதிச் சுற்று-1ல் ஏற்கெனவே ஐதராபாத்தை வென்ற உற்சாகத்தில் கொல்கத்தா களமிறங்குகிறது. கௌதம் காம்பிர் தான் பெரும் பலம். அணித் தலைவராக 2012, 2014ல் கொல்கத்தாவுக்கு கிண்ணம் வென்று கொடுத்தார். இம்முறை ஆலோசகராக அசத்துகிறார். இவரது சிறப்பான வியூகம் வெற்றிக்கு உதவலாம்.

**"சுழல்" சாதகம்**

நரைன், ரகுவன்ஷி, கப்டன் ஸ்ரேயாஸ், வெங்கடேஷ் ஓட்ட மழை பொழியலாம். "பினிஷர்" பணிக்கு ரிங்கு சிங் உள்ளார். அணியை மீட்பதில் "சகலதுறை வீரர்" ரசல் வல்லவர். சென்னை ஆடுகளம் சுழலுக்கு சாதகமானது. 180-200 ஓட்டங்களை எடுப்பதே கடினம். இது "சுழல்" நாயகர்கள் நரைன் (16 விக்.,), வருண் சக்ரவர்த்திக்கு (20) சாதகம். வேகத்தில் "காஸ்ட்லி" ஸ்ரார்க் (ரூ. 24.75 கோடி) மிரட்டலாம்.




ஹைதராபாத் அணிக்கு அணித் தலைவர் பட் கம்மின்ஸ் ராசி கைகொடுக்கலாம். கடந்த 6 மாதத்தில் அவஸ்திரேலிய அணித் தலைவராக உலக டெஸ்ட் சம் பியன்ஷிப், ஆஷஸ் தொடர், உலக கிண்ணம் (50 ஓவர்) வென்றார். இதனால் இவரை ரூ. 20.50 கோடிக்கு ஹைதரா பாத் அணி வாங்கி யது. தற்போது பைனலில் களம் காண் கிறார். சூழ் நிலைக்கு ஏற்ப அணியை வழிநடத்து வதில் கில்லாடி.

**பேட்டிங் பலம்**

டிராவிஸ் ஹெட் (567 ஓட்.), அபிஷேக், கிளாசன், திரிபாதி, மார்க்ரம் என பேட்டிங் படை வலுவாக உள்ளது. "வேகத்தில்" அசத்த நடராஜன், கம்மினஸ், புவனேஷ்வர் உள்ளனர். சுழற்பந்துவீச்சில் ஷாபாஸ் அகமது, அபிஷேக் சாதிக்கலாம்.


## வேலையாட்கள் தேவை

நெல்லியடியில் இயங்கும் சைவ உணவத்துக்கு கீழ்வரும் வேலையாட்கள் தேவை. ஆர்வமுள்ளவர்கள் தொடர்புகொள்ளவும்.

- மரக்கறி வெட்டுபவர்
- உணவு பரிமாறுபவர்

- சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கலாம்.
- தங்குமிடம், உணவு வழங்கப்படும்.

(C-0457)

தொடர்புகளுக்கு:- 077 219 0128


## ஊடக நிறுவனத்திற்கு ஆட்கள் தேவை

- செய்தி வாசிப்பாளர்
- செய்தி தொகுப்பாளர்
- வீடியோ எடிட்டிங்

தொடர்புகளுக்கு (893)

076 126 6682

WP LEO (Pvt) Ltd
Jaffna | Sri Lanka




WE ARE LOOKING FOR

Frontend Developer

Are You Ready to join Us ?

Qualifications:
# Responsive Web Design
# HTML, CSS, JavaScript
# RESTful Services/APIs
# CMS

Apply Now!

Location: Jaffna
Job Type: Full-time
(888)

+94 771 127 614

## கண்ணீர் அஞ்சலி

எமது ஆசிரியர்
திரு.சி.சிவேந்திரன்
அவர்களின் தாயார்

அமரர் சின்னராசா யோகம்மா



அவர்கள் நேற்று முன்தினம் (24.05.2024) காலமாகிவிட்டார். அன்னாரது இழப்பினால் துயருற்றிருக்கும் ஆசிரியருக்கும் அவரது குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு அன்னாரின் ஆன்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

ஆசிரியர் நலன்புரிக் கழகம்
யா/பெரியபுலம் மகா வித்தியாலயம்
(C-0453)

## சேவைநலன் பாராட்டு

திருமதி சிவவதனி புவனேந்திரன் SLTS - I
(கணித பாட ஆசிரியர்)



சேவை விபரம்

- யா/கரணவாய் மகா வித்தியாலயம் 01.09.1992 - 31.03.1996
- யா/காசிநாதர் வித்தியாலயம் 01.04.1996 - 31.12.2002
- யா/வதிரி திரு இருதயக் கல்லூரி 01.01.2003 - 23.12.2011
- யா/நாகர்கோவில் மகா வித்தியாலயம் 24.01.2012 - 01.01.2017
- யா/அல்வாய் சின்னத்தம்பி வித்தியாலயம் 02.01.2017 - 25.05.2024

எமது பாடசாலையில் கடமையாற்றி நேற்றைய தினம் (25.05.2024) தனது 57ஆவது அகவை கண்டு ஓய்வுபெறும் திருமதி **சிவவதனி புவனேந்தரன்** அவர்களை பல்லாண்டு காலம் சீரும் சிறப்பும் பெற்று வாழ வாழ்த்துகின்றோம்.


Best Wishes!

அதிபர், ஆசிரியர்கள்,
யா/அல்வாய் சின்னத்தம்பி வித்தியாலயம்
(C-0454)

## கொக்குவில் மத்திய அன்னையின் கண்ணீர்க் காணிக்கை

கொக்குவில் மத்திய சனசமூக நிலையத்தை ஆரம்பித்த உறுப்பினர்களில் ஒருவரும் கொக்குவில் மத்திய சனசமூக நிலைய விளையாட்டுக்கழக முதல் தலைவருமாகிய

அமரர் மாணிக்கநடராஜா ஜெகன் மோகன் (பொம்மி)




மண் மகிழ : 01.08.1961
கண் நெகிழ : 23.05.2024

அவர்கள் கொக்குவில் மண்ணின் மிகச் சிறந்த பற்றாளனும் பல சமூக அமைப்புக்களை ஒரு நேர்கோட்டில் இயக்கிய உத்தமர். சமூகத்தின் பல்வேறு பரிணாமங்களையும் அன்பால் கட்டிப்போட்டவர். இவருடைய ஆத்மா சாந்தியடைய பிரார்த்திப்பதுடன் அன்னாரை இழந்து தவிக்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

என்றும் உங்கள் சிந்தனைகளுடன்
கொக்குவில் மத்திய சனசமூக நிலையமும்
விளையாட்டுக்கழகமும்
(K.C.C.C & K.C.C.C.S.C)
(C-0458)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வவுனியா - கந்தபுரம் கிராம அலுவலர் பிரிவில் இருந்து இடமாற்றமாகி செல்லும் கிராம அலுவலர் ஒருவருக்கு அதிகளவிலான மலர்மாலைகளை சூட்டி மகிழ்வித்து, கண்ணீருடன் அப்பகுதி மக்கள் வழியனுப்பி வைத்த பிரயாவிடை நிகழ்வு நேற்று கந்தபுரம் பொது நோக்கு மண்டபத்தில் இடம்பெற்றது. (படம்- வசந்தரூபன்)

# சாவகச்சேரியில் விபத்து இருவர் படுகாயம்

(சாவகச்சேரி)

சாவகச்சேரிப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஐயா கடைச் சந்திப் பகுதியில் நேற்று சனிக்கிழமை மதியம் இடம்பெற்ற விபத்தில் இரு இளைஞர்கள் படுகாயமடைந்துள்ளனர்.

சாவகச்சேரிப் பகுதியில் இருந்து ஏ-9வீதியூடாகச் சென்ற முச்சக்கரவண்டி ஐயா கடைச் சந்திப் பகுதியில் கிளை வீதி ஒன்றிற்குள் திருப்ப முற்பட்ட வேளையில் அதே திசையில் பின்புறமாக வேகமாக வந்த மோட்டார் சைக்கிள் முச்சக்கர வண்டியுடன் மோதியதில் இவ் விபத்துச் சம்பவித்துள்ளது.

இதில் மோட்டார் சைக்கிளில் பயணித்த இரு இளைஞர்களும் படுகாயமடைந்த நிலையில் அப்பகுதி வர்த்தகர்களால் மீட்கப்பட்டு சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு அதில் ஒருவர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார்.

பளைப் பகுதியைச் சேர்ந்த இரு இளைஞர்களே இவ்வாறு படுகாயமடைந்த நிலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். விபத்துத் தொடர்பான மேலதிக விசாரணைகளை சாவகச்சேரிப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (நி-6-30)

## புங்குடுதீவு வீரகத்தி விநாயகர் மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

புங்குடுதீவு மேற்கு இருப்பிட்டி பெரியபுலம் ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலய மஹோற்சவ விஞ்ஞாபனம் எதிர்வரும் 30 ஆம் திகதி வியாழக்கிழமை முற்பகல் 11.30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 10 தினங்கள் உற்சவங்கள் இடம்பெறவுள்ளது.

ஜூன்மாதம் 7 ஆம் திகதி வெள்ளிக்கிழமை தேர்த்திருவிழாவும் 8 ஆம் திகதி சனிக்கிழமை தீர்த்தத் திருவிழாவும் அன்று மாலை கொடியிறக்க வைபவமும் இடம்பெறும். (நி-6)

## கும்பாபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

யாழ். திருவண்ணை கன்னா திட்டி காளி அம்பாள் தேவஸ்தான திரிதள இராஜகோபுர கும்பாபிஷேக பெருஞ்சாந்திவிழா விஞ்ஞாபனம் எதிர்வரும் ஜூன் மாதம் 6 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10.38 மணி தொடக்கம் 11.20 மணி வரையுள்ள சுப வேளையில் திரிதள இராஜகோபுர கும்பாபிஷேகம் இடம்பெறவுள்ளது. (நி-6-33)


## வீடு வாடகைக்குத் தேவை

நான்கு பேர் கொண்ட குடும்பத்திற்கு பலாலி வீதியில் வீடு வாடகைக்குத் தேவை. (யாழ் நகரை அண்டிய பகுதியில்)

(876)

071 990 9306

## விற்பனைக்கு

யாழ்.விக்ரோரியா வீதியில் 12 பரப்பு காணி விலை 40 கோடி ரூபா. யாழ்.வைத்தியசாலை வீதியில் 20 அடி அகலம் 200 அடி நீளமும் கொண்ட காணி 12 கோடி ரூபா.
யாழ்.வைத்தியசாலை வீதியில் 60 அடி அகலமும் 216 நீளமும் கொண்ட காணி 60 கோடி ரூபா.
யாழ்.மானிப்பாய் வீதியில் 3 கடைகள் 3 கோடி ரூபா. யாழ்.கஸ்தூரியார் வீதியில் 1 பரப்பில் அமைந்த கடையும் காணியும் 6 கோடி ரூபா.
யாழ்.பிறவுண் வீதியில் 5 பரப்பு காணி 20 கோடி ரூபா.
யாழ் தட்டாதெரு சந்திக்கு அண்மையில் 2 1/2 பரப்பு காணி 3 கோடி ரூபா.
யாழ்.திருநெல்வேலி சந்திக்கு அண்மையில் 5 பரப்புக் காணி 7.50 கோடி ரூபா.
யாழ்.பிரப்பங்குளம் வீதியில் 5 பரப்பு காணியும் வீடும் 7.50 கோடி ரூபா.
கொழும்பு வெள்ளவத்தை விவேகானந்தா வீதியில் 6 பேர்ச்ஸ் காணி 4 கோடி 80 இலட்சம்.
மன்னார் நகருக்கு அண்மையில் நல்ல நிலையில் இயங்கிவரும் மில் 22 கோடி ரூபா.
யாழ்.சென்ஜோன்ஸ் பாடசாலை குருசெல் வீதிக்கு அண்மையில் 6 பரப்பு காணியில் 3 புதிய வீடும், காணியும் ரூபா 18 கோடி.

(சி-449)

தொடர்புகளுக்கு- 077 723 2535

## மணமகள் தேவை

யாழ்.இந்து பிரபல வர்த்தகத்தில் ஈடுபடும் 45 வயதுடைய 5'11' உயரமுடைய மணமகனுக்கு அழகிய தோற்றம் உடைய மணமகளை எதிர்பார்க்கின்றோம்.

(சி-2301)

070 528 1229

(தரகர் தேவையில்லை)

## வீடு விற்பனைக்கு

யாழ்.பலாலி வீதியில் பேபி போட்டோவுக்கு அண்மையில் 3 பரப்பில் அமைந்த காணியில் வீடு விற்பனைக்கு உண்டு.

(871)

T.P-077 723 2535

## லங்கா மஹால் (PVT) LTD

DHL உள்நாட்டு, வெளிநாட்டு விரைவுப் பொதிகள் சேவை

அதிவிரைவாக குறைவான விலையில் இலவசமாக உங்கள் வீடுகளுக்கே வந்து பொதிகள் சேகரிக்கப்படும். நம்பகமான சேவை.

(354)

இந்தியாவில் இருந்து இலங்கைக்கு ஆகாய மற்றும் கடல்வழி மார்க்கமூடாக நேரடியாக இறக்குமதி செய்யப்படும் விரைவு பொதிகள் சேவை.

இந்தியா தொடர்புகளுக்கு : 00919566156719

WESTERN UNION WU MoneyGram Ria MONEY TRANSFER ஊடாக வெளிநாடுகளிலிருந்து அனுப்பப்படும் பணத்தினை எம்மிடம் இருந்து விரைவாக பெற்றுக்கொள்ளலாம்.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், மட்டக்களப்பு, திருகோணமலை, கொழும்பு.
077 839 3974


# இராசிபலன்

26.05.2024
வைகாசி 13, ஞாயிற்றுக்கிழமை
திருதியை முன்னிரவு 6.25 மணிவரை
மூலம் முற்பகல் 11.04 மணிவரை

சுபநேரம் -8.52-10.22 மணிவரை
இராகுகாலம்-4.22-5.52 மணிவரை
சங்கடஹர சதுர்த்தி விரதம்.

சந்திராஷ்டமம்
பரணி,கார்த்திகை

வளவன்



**மேஷம்** இழுபறியாக இருந்த காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள், பூர்வீகச் சொத்து தொடர்பில் நன்மையுண்டு, மறைமுகப் போட்டிகளை சமாளிப்பீர்கள்.



**கடகம்** வரவேண்டிய பாக்கிகள் வந்துசேரலாம், சச்சரவை விட்டு சாதித்துக் காட்டுவீர்கள், உடல் நலன் சீராகும், உற்சாகத்தோடு பணிபுரிவீர்கள், காரிய அனுகூலமுண்டு.



**துலாம்** ஆதாயம் தரும் வேலையொன்றில் ஆர்வம் காட்டுவீர்கள், வீட்டு உபயோகப் பொருட்களை வாங்குவதில் நாட்டம் செல்லும், உறவினர் வழியில் நன்மையுண்டு.



**மகரம்** வீட்டை அழகாக வைத்திருப்பதில் ஆர்வம் காட்டுவீர்கள், தொழில் ரீதியான பயணங்கள் இடம்பெறலாம், இடமாற்றத்தால் இனிய மாற்றம் காண வேண்டிய நாள்.



**ரிஷபம்** கேட்ட இடத்தில் உதவிகள் கிடைப்பது அரிது, மனக்குழப்பம் தீர கண்ணனை வழிபட வேண்டிய நாள், புதிய பொறுப்புக்களை யோசித்து ஏற்பது நல்லது.



**சிம்மம்** உள்ளம் மகிழும் சம்பவம் குடும்பத்தில் நிகழலாம், பணத் தேவைகள் எளிதில் பூர்த்தியாகும், பிள்ளைகளின் நீண்ட நாளைய கோரிக்கைகளை நிறைவேற்றுவீர்கள்.



**விருச்சிகம்** உறவினர் சந்திப்பு உண்டு, நண்பர்களின் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும் வாய்ப்புண்டு, வாய்ப்புகள் உங்களைத் தேடி வரலாம், சுப செய்திகள் வந்து சேரலாம்.



**கும்பம்** தித்திக்கும் செய்திகள் வந்து சேரலாம், பொது வாழ்வில் பாராட்டும் புகழும் கூடும் நாள், தொழில் நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், வருமானம் திருப்தி தரும்.



**மிதுனம்** பணத்தேவைகள் கடைசி நேரத்தில் பூர்த்தியாகும், தொழில் வளர்ச்சி கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும்.



**கன்னி** பேச்சில் கனிவு பிறக்கும் பொருளாதார நிலையுயர என்ன வழி என்று யோசிப்பீர்கள்,தொலைபேசி வழியில் அனுகூலம் தரும் தகவல்கள் வந்து சேரலாம்.



**தனுசு** மற்றவர்களின் விமர்சனங்களை மறந்து செயற்படுவது நல்லது, காரிய வெற்றிக்கு இஷ்ட தெய்வத்தை வணங்க வேண்டிய நாள், உணவில் கட்டுப்பாடு தேவை.



**மீனம்** பெரிய மனிதர்களின் தொடர்புகள் உங்களின் தகுதியை உயர்த்தும், குடும்ப மகிழ்ச்சி கூடும், தொழில் நலன் கருதி எடுத்த முயற்சி கைகூடும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை தமிழர் விவகாரத்தில் மனித உரிமை பேசும் நாடுகள் வேடிக்கை

## அன்புமணி ராமதாஸ் கண்டனம்



(சென்னை)

**இலங்கைப் போரில் கொல்லப்பட்ட ஈழத்தமிழர்களின் குடும்பங்களுக்கு நீதி பெற்றுத் தருவதற்காக ஐக்கிய நாடுகள் அவையில் இந்தியா குரல் கொடுக்க வேண்டும்.**

ஈழத்தமிழர்களுக்கு நீதி வழங்கா விட்டால் இலங்கையுடனான உறவை முறித்துக் கொள்வதாக இந்தியா எச்சரிக்க வேண்டும். ஈழத்தமிழர்களின் தந்தை நாடான இந்தியா, அதன் தூதரக வலிமையை முழுமையாகப் பயன்படுத்தி ஈழத்தமிழர்களுக்கு நீதி பெற்றுத் தர வேண்டும், என்று பாமக தலைவர் அன்புமணி ராமதாஸ் தெரிவித்தார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், "இஸ்ரேலுக்கும், ஹமாஸ் அமைப்புக்கும் இடையிலான போரில் 35 ஆயிரத்துக்கும் கூடுதலானவர்கள் படுகொலை செய்யப்பட்டுள்ள நிலையில், அதற்கு காரணமான இஸ்ரேல் ஆட்சியாளர்கள் மீது பன்னாட்டு நீதிமன்றங்களில் வழக்குகள் தொடுக்கப்பட்டு, விசாரணைகள் தொடங்கியுள்ளன. பாலஸ்தீன மக்களுக்கு ஏற்பட்ட பாதிப்புகளுக்கு நீதி வழங்க மேற்கொள்ளப்பட்டுள்ள இந்த நடவடிக்கைகளை வரவேற்கும் அதே நேரத்தில் இதே நீதி ஈழத்தமிழர்களுக்கு வழங்கப்படாதது ஏன்? என்ற வினாவும் எழுந்திருக்கிறது.

ஐநா அமைப்பின் கீழ் செயற்பட்டு வரும் போலந்து நாட்டின் தி ஹேக் நகரில் உள்ள பன்னாட்டு நீதிமன்றத்தில் இஸ்ரேல் ஆட்சியாளர்கள் மீது இனப்படுகொலை வழக்கை தென்னாபிரிக்க அரசு அண்மையில் தொடர்ந்து நடத்தி வருகிறது.

மேலும், போர்க்குற்றங்கள், மனித குலத்துக்கு எதிரான குற்றங்கள், இனப்படுகொலை ஆகிய அட்டூழியக் குற்றங்களுக்கு எதிரான விசாரணைகளும் பன்னாட்டு நீதிமன்றங்களில் தொடங்கப்பட்டிருக்கின்றன.

இஸ்ரேல் நாட்டின் போர்க்குற்றங்கள் தொடர்பாக மேற்கொள்ளப்படுள்ள நடவடிக்கைகள் அனைத்தும் வரவேற்கத் தக்கவை. அதேநேரத்தில் இலங்கையின் ஒன்றரை லட்சம் அப்பாவித் தமிழர்கள் படுகொலை செய்யப்பட்ட விவகாரத்தில் அமெரிக்கா, இந்தியா உள்ளிட்ட உலகின் மனித உரிமை பேசும் நாடுகள் கடந்த 15 ஆண்டுகளாக எந்த நடவடிக்கையும் எடுக்காமல் வேடிக்கை பார்த்துக் கொண்டிருப்பது ஏன்?

இலங்கையில் நிகழ்த்தப்பட்ட போர்க் குற்றங்களுக்கு நீதி கிடைக்கவில்லை என்று ஐ.நா மனித உரிமைகள் ஆணையம் 17.05.2024 அன்று வெளியிட்ட அறிக்கையானது போர்க்குற்றவாளிகளை தண்டிக்கும் கடமையை இலங்கை சரியாக செய்யவில்லை என்பதை வெளிச்சம் போட்டு காட்டியுள்ளது. அதனால், இலங்கை செய்யத் தவறியதை உலக நாடுகள் தான் செய்ய வேண்டும் என்று கூறியுள்ளது.

எனவே ஈழத்தமிழர்களுக்கு நீதி பெற்றுத் தரும் கடமை உலக நாடுகளுக்கு, குறிப்பாக, இந்தியாவுக்கு உள்ளது. இலங்கை சிக்கலில், இந்திய அரசு இப்போது மேற்கொண்டுள்ள நிலைப்பாடு மாறினால் ஈழத்தமிழருக்கு இனியாவது நீதி கிடைக்கும் என அவர் தெரிவித்தார். (நி-6)

# மரங்கள் விழும் ஆபத்து இருந்தால் 117 என்ற இலக்கத்திற்கு அறிவிக்கவும்

## அனர்த்த முகாமைத்துவ அமைச்சு கோரிக்கை

(கொழும்பு)

நாட்டில் எப்பிரதேசத்திலும் அனர்த்த நிலைமை அல்லது மரம் முறிந்துவிழும் ஆபத்து இருக்குமானால் அதுதொடர்பில் அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தின் 117 என்ற துரித இலக்கத்துக்கு அறிவித்தால் உடனடியாக நடவடிக்கை எடுக்க ஏற்பாடு செய்யப்படும் என அனர்த்த முகாமைத்துவ மற்றும் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரமித்த பண்டார தென்னகோன் தெரிவித்தார்.

அனர்த்த முகாமைத்துவ இராஜாங்க அமைச்சில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற விசேட செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

மரங்கள் முறிந்து விழும் சம்பவங்கள் அதிகரித்து வருகிறது. ஆனால் இது தொடர்பாக இதுவரை கவனம் செலுத்தப்பட்டிருப்பதாக தெரியவில்லை. மரங்கள் விழுவது தொடர்பாக எச்சரிக்கை விடுப்பதற்கென ஒரு நிறுவனம் எமது நாட்டில் செயற்படுவதில்லை.

இவ்வாறான எச்சரிக்கை விடுக்கும் பொறுப்பை கட்டட ஆராய்ச்சி நிறுவனத்துக்கு நாங்கள் வழங்கி இருக்கிறோம். அந்த துறையை முன்னேற்ற வேண்டும்.

துறைசார் நிபுணர்களை இதற்கு இணைத்துக்கொள்ள வேண்டும். அதே போன்று தேசிய கொள்கை அமைக்க வேண்டும். இதுதொடர்பாக உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு பாரிய பொறுப்பு இருக்கிறது.

அதேநேரம் திடீர் வெள்ளப்பெருக்கு ஏற்படுவதற்கு பிரதான காரணமாக இருப்பது, உள்ளூராட்சி நிறுவனங்களின் அனுமதி இல்லாமல் கட்டுமானங்களை அமைப்பதற்கு அனுமதிப்பதாகும். சட்டவிரோத கட்டடங்களை நிறுத்துவதற்கு அனுமதியளிப்பதில் ஏற்பட்டிருக்கும் தாமதிப்பை மறைக்க வேண்டாம் என அந்த நிறுனங்களை நாங்கள் கேட்டுக்கொள்கிறோம் என அவர் தெரிவித்தார்.


# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு : 1994 இந்து
நட்சத்திரம்: திருவாதிரை
கி.பா: 20
உயரம் : 5'6"
தகைமை/தொழில்: A/L, கிராம சேவையாளர்
எதிர்பார்ப்பு: அரச/தனியார் உத்தியோகம்
தொ.இ: B/14529

பிறப்பு: 1995 இந்து
நட்சத்திரம்: கார்த்திகை
கி.பா: 12 1/2
உயரம்: 5'5"
தகைமை/தொழில்: Civil Engineer, Lecturer
எதிர்பார்ப்பு: Engineer, Doctor, Lecturer, Accountant
தொ.இ: B/14533

பிறப்பு:- 1974 இந்து
நட்சத்திரம்: சதயம்
சூரி செவ் 12 இல் கி.பா: 43
உயரம் : 5'8"
தகைமை/தொழில்: BSc, Lecturer(IT)
எதிர்பார்ப்பு: தகுதியான பெண் விவாகரத்தானவர்.
தொ.இ: B/14534

பிறப்பு: 1991 இந்து
நட்சத்திரம்: பூரம் உயரம்: 5"8"
தகைமை/தொழில்:- BBM, Business Development Manager
எதிர்பார்ப்பு: Graduate
தொ.இ: B/14539

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு - 1992 இந்து
நட்சத்திரம்: மகம்
கி.பா: 18
உயரம் : 5'6"
தகைமை/தொழில்: A/L
எதிர்பார்ப்பு: வெளிநாட்டு மணமகன்
தொ.இ: G/14570

பிறப்பு- 1984 இந்து
நட்சத்திரம்: ஆயிலியம்
உயரம் : 5'2"
தகைமை/தொழில்: உயர்தரம் டிப்ளோமா
எதிர்பார்ப்பு: வெளிநாடு
தொ.இ: G/14572

பிறப்பு: 2000 இந்து
நட்சத்திரம்: புனர்பூசம்
உயரம் : 5'1"
தகைமை/தொழில்: BSc (Final Year)
எதிர்பார்ப்பு: பட்டதாரி. பொறியியலாளர். மருத்துவர்
தொ.இ: G/14575

பிறப்பு : 1996 இந்து
நட்சத்திரம்: பூராடம்
கி.பா: 10 1/2
சூரி செவ் 9 இல்
உயரம்: 5'3"
தகைமை/தொழில்: BSc.office Work
எதிர்பார்ப்பு: படித்தவர். வெளிநாடு
தொ.இ: G/14576

கல்யாணமாலை
இல. 3, 2 ஆம் ஒழுங்கை,பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 4000 ரூபாய் மட்டும்


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

வலம்புரியின் வாரமலர்
சங்குநாதம்
நாதம் 443
Viber 076 636 3378



# ரைசியின் மரணம்: என்ன ஆகும் ஈரான்?

“ஈரானிடம் இருக்கும் விமானங்கள், ஹெலி கொப்டர்கள் என்று பலவும், புரட்சிக்கு முன்பு அந்த நாடு வாங்கியவை. அவற்றைப் பராமரிக்கவோ, புதுப்பிக்கவோ அந்த நாட்டிடம் தொழில்நுட்பங்கள் இல்லை. அப்படி ஓர் அரதப்பழசான ஹெலிகொப்டரில் பயணம் செய்தே இறந்திருக்கிறார் ரைசி.”



இந்த முறை வீழ்ந்து விடுமா? ஈரான் நாட்டில் ஒவ் வொருமுறையும் ஏதேனும் நடக்கும்போதும் அமெரிக்கா மற்றும் மேற்கத்தேய நாடுகளின் எதிர்பார்ப்பு இப்படித்தான் இருக்கிறது. ஈரான் ஜனாதிபதியாக இருந்த இப்ராஹிம் ரைசி ஹெலிகொப்டர் விபத்தில் இறந்திருக்கும் இந்தத் தருணத்திலும் அதே எதிர்பார்ப்பு அவர்களுக்கு இருக்கிறது.

மன்னராட்சிக்கு எதிராக கடந்த 1979 ஆம் ஆண்டு இஸ் லாமியப் புரட்சி நடத்தப்பட்டு ஈரானில் ஆட்சி மாறியது. அன்று முதல் கடந்த 45 ஆண்டுகளாக அமெரிக்காவுக்கு முள்ளாக உறுத்திக்கொண்டிருக்கும் நாடு ஈரான்.

இஸ்லாமிய சட்டப்படி ஆட்சி அங்கு நடைபெற்றுவருகிறது. ஜனாதிபதி ஆட்சி செய்வதாகக் காட்டிக்கொண்டாலும், பெரும் பான்மையாக இருக்கும் ஷியா இனத்தைச் சேர்ந்தவர்களைக் கொண்ட நிர்வாக சபையே நாட்டை ஆள்கிறது. நாட்டின் உச்சத் தலைவரும் மதகுருவுமான அயத்துல்லா அலிகாமெனி அந்த சபைக்குத் தலைவர். மதம், அரசாங்கம், நீதித்துறை, இராணுவம் என்று எல்லாமே அவர் கட்டுப்பாட்டில் இருக்கும் ஒரு விநோத அமைப்பு அது.

உச்சத் தலைவர் கையில் லகான் இருந்தாலும் அவரை யாரும் குறை சொல்ல மாட்டார்கள். மக்கள் தினம் தினம் சந்திக்கும் பிரச்னைகளுக்கு ஜனாதிபதியை திட்டுவார்கள். இப்படி தன் மீதான விமர்சனங்களைத் தாங்கிக் கொள்ளும் ஒரு பாதுகாப்புக் கவசம் போலவே ஜனாதிபதியை வைத் திருப்பார் உச்சத் தலைவர்.

தற்போதைய உச்சத்தலைவர் காமெனிக்கு 85 வயதாகிறது. அவருக்குப் பிறகு அந்த இடத்தை அடைய வேண்டியவராக அறியப்பட் டவர் இப்ராஹிம் ரைசி. காமெனி போலவே அமெரிக்க வெறுப்பைத் தீவிரமாகப் பின்பற்றியவர். கடந்த மாதம் சிரியாவில் உள்ள ஈரான் தூதரகத்தை இஸ்ரேல் தாக்கியது. அதற்கு பதிலடியாக சமீபத்தில் இஸ்ரேல் மீது தாக்குதல் நடத்தியவர். அதனால் போர் மூளும் அபாயம் இருந்தபோதும் கவலைப் படவில்லை.

ஈரானின் அணுஆயுதத் திட்டங்கள் குறித்த சந்தேகத்தில் அந்த நாட்டின்மீது பொருளாதாரத் தடை விதிக்கப்பட்டுள்ளது. இதனால் ஈரான் பல நெருக்கடிகளைச் சந்தித்து வருகிறது. விலைவாசி உயர்வு, அத்தியாவசியப் பொருள் களுக்குத் தட்டுப்பாடு என்று மக்களிடம் அதிருப்தி நிலவுகிறது. இறுக்கமான அரசுக் கட்டுப்பாடுகளை எதிர்த்துப் போராட்டம்கூட நடத்தமுடியாத நிலை. இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு ஹிஜாப் எதிர்ப்பு போராட்டம் தீவிரமாக நடைபெற்ற போது, மக்கள் பெரிய அளவில் கிளர்ந்து எழுந்தனர். அது உரிமைக்கான போராட்டம் என்பதைவிட, சகித்துக்கொள்ள முடியாத வாழ்க்கைச்சூழலிலி ருந்து விடுபடுவதற்கு இளைய தலைமுறை நடத்திய போராட்டம் என்று சொல்லலாம். அந்தப் போராட்டத்தின் பின்னணியில் மேற்கத்தேய சக்திகள் இருப்ப தாகக் குற்றம் சாட்டி, நூற் று க்கணக்கானோரைக் கொன்று அந்தப் போராட்டத்தை ஒடுக்கினார் ரைசி.

ரைசியின் மரணத்துக்குக்கூட மறைமுகமாக இந்தத் தடைகளே காரணம் எனலாம். ஈரானிடம் இருக்கும் விமானங்கள், ஹெலி கொப்டர்கள் என்று பலவும், புரட்சிக்கு முன்பு அந்த நாடு வாங்கியவை. அவற்றைப் பராமரிக்கவோ, புதுப்பிக்கவோ அந்த நாட்டிடம் தொழில் நுட்பங்கள் இல்லை. அப்படி ஓர் அரதப் பழசான ஹெலி கொப்டரில் பயணம் செய்தே இறந்திருக்கிறார் ரைசி.

என்னதான் ரைசி வெளிப்படையாக மேற்கத்தேய எதிர்ப்பு பேசினாலும், ஈரானை ஒரு முக்கியமான சக்தியாக உலக அரங்கில் முன்னிறுத்த முயன்றார். உலகின் முக்கியமான சக்திகளால் ஒதுக்கப்பட்ட ஒரு தேசமாக இத்தனை காலம் ஈரான் இருந்தது. லெபனானின் ஹிஸ்புல்லா அமைப்பு, ஏமனில் ஹவுதி அமைப்பு என பல தீவிரவாத அமைப்புகளுக்கு மறைமுகமாக நிதியும் ஆயுதமும் அளிப்பதால் ஈரானை அரபு நாடுகளே வெறுத்தன.

இந்தச் சூழலில், அணு ஆயுதம் தயாரிக்கும் வல்லமையை ஈரான் பெற்றிருப்பதை உணர்த்தி, அமெரிக்காவுடன் ஒரு திரைமறைவுப் பேச்சுவார்த்தையைத் தொடங்கினார் ரைசி. இன்னொரு பக்கம் உக்ரைனில் ரஷ்யா நடத்தும் போருக்கு ட்ரோன்களை அளித்து அந்த நாட்டுடன் நெருக்கமானார். பரமவிரோதியான சவூதிஅரேபியாவுடனும் நெருங்க முயன்றார்.

இந்தியாவுக்கும் அவர் நெருக்கமான நண்பனாக இருந்தார். கடந்த ஆண்டு பிரதமர் மோடி முயற்சியில் ஷாங்காய் கூட்டுறவு அமைப்பில் ஈரானை இந்தியா இணைத்தது. இதேபோல, பிரிக்ஸ் கூட்டமைப்பிலும் ஈரானை இணைக்க இந்தியா முயற்சி செய்துவருகிறது.

ஈரானின் சபஹார் துறை முகத்தை ஒப்பந்த முறையில் இந்தியாவுக்கு அளித்தார் ரைசி. மும்பையில் தொடங்கி இந் தியாவின் மேற்குக்கரை வழியாக அரபு நாடுகளைத் தாண்டி ஐரோப்பா வரை செல்லும் கப்பல் பாதையில் முக்கியமான துறைமுகம் அது. இந்தியாவுக்கு அது கிடைத்தால் இந்தக் கடல் போக்குவரத்தில் இந்தியா வல்லமை மிக்க ஒரு இடத்தில் இருக்கும். இதற்கான ஒப்பந்தம் மே 13 ஆம் திகதிதான் கையெழுத்தானது. அப்போது அமெரிக்கா அதற்கு எதிர்ப்பு தெரிவித்தது.

ரைசியின் இறுதிப்பயணம் இலங்கைக்கான பயணமாக மாறிவிட்டது. திட்டம் ஒன்றை ஆரம்பித்து வைப்பதற்காக இலங்கை வந்ததுதான் தனது இறுதிப் பயணம் என்பதை ரைசி எள்ளளவும் சிந்தித்திருக்க மாட்டார்.ஆனால் அது தான் உண்மையானது.

ரைசி இலங்கை விஜயத்தை விரும்பாத அமெரிக்கா வெளிப்ப டையாக அதை எதிர் த்தது. ஆயினும் ரைசி இலங்கை வந்தார்-சென்றார். ரைசியின் அரசியல் அத்தியாயம் அத்துடன் முடிந்து போனது. இலங்கை வந்து சென்ற ஒரு வாரத்திலேயே ரைசியின் மரணம் நிகழ்ந்திருப்பது துயரம்.

ஜூனியர் விகடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலடி மாநாடு

வாத்தியார் வைத்திலிங்கம் தலைமையில் ஆலடி மாநாடு கூடியது. மாநாட்டு உறுப்பினர்கள் அனைவரும் ஆலடிக்கு வந்திருந்தனர். இறைவணக்கத்துடன் ஆலடி மாநாட்டை ஆரம்பிப்பம் என்று வாத்தியார் கூற, அனைவரும் எழுந்து நின்று இறைவணக்கம் செலுத்தி அமர்ந்தனர்.

தொடர்ந்து ஆலடியில் அமைதி நிலவியது. அமைதியைக் குலைக்க விதானையார் விசுவலிங்கம் குரல் கொடுத்தார்.

**விதானையார்:-** மே மாதத்தில இப்படியொரு மழை முன்பு ஒரு போதும் பெய்ததில்லை. இந்த முறை தான் இப்படியொரு மழை பெய்திருக்குது.

**சாத்திரியார்:-** ஏன் விதானையார், முன்பெல்லாம் சித்திரையில சிறுமாரி எண்ட நிலைமை இருந்தது தானே.

**பண்டிதர்:-** அது மட்டுமல்ல, சித்திரையில சிறு குழப்பம் எண்டு அந்தக் காலத்தில சொல்லுவினம். அந்தச் சித்திரைக் குழப்பம் தான் இப்ப நடக்கிற காற்றும் மழையும்.

**விதானையார்:-** பண்டிதர் ஐயா! முந்தின நிலைமை இப்ப இல்லை. இப்ப இயற்கை சீற்றமடைந்து விட்டது.

ஒரு காலத்திலும் இல்லாத வெயில். ஒரு காலத்திலும் இல்லாத மழை. எண்டைக்கு இந்த உலகத்தில தர்மம் நிலை நாட்டப்படுகுதோ அண்டைக்குத்தான் இயற்கையும் சீராகும்.

**சிறாப்பர்:-** விதானையார் சொல்லுறது நூறுவீதம் உண்மை. இப்ப யாழ்ப்பாணத்தில கடைகடையாக ஏறி, யாசிக்கிறவர்களின்ர எண்ணிக்கை கடுமையாக அதிகரித்திருக்குது.

என்ன சங்கதி எண்டு அறிஞ்சால், பிச்சை எடுக்கிறவர்களுக்கு ஒரு முகவர் இருக்கிறாராம். அவர் பிச்சை எடுக்கிறவர்களை ஏற்றிக் கொண்டு வந்து யாழ்ப்பாணத்தில இறக்கிவிடுவார்.

அவையள் யாழ்ப்பாணத்தில இருக்கிற அத்தனை கடைகளுக்கும் சென்று பிச்சை எடுப்பினம். பிறகு ஓர் இடத்தில கூடி, எடுத்த பிச்சைக் காசை எல்லோரும் அந்த முகவரிட்டக் கொடுத்து தங்களுக்குரிய கூலியை அவரிட்ட இருந்து பிச்சைக்காரர்கள் பெற்றுக் கொள்ளுவினம்.

**மூப்பர்:-** அட நாசமறுப்பு சங்கதி அப்படியோ. இந்த நாட்டில என்ன தொழில் செய்யிறதெண்ட விவஸ்தையே இல்லாமல் போயிற்று.

**சாத்திரியார்:-** அது சரி, சர்வதேச மன்னிப்புச் சபையின் செயலாளர் நாயகம் அக்னெஸ் காலமார்ட், முள்ளிவாய்க்கால் நினைவிடத்தில அஞ்சலி செலுத்தினவரல்லோ, அவர் செலுத்தின அஞ்சலி சரத் வீரசேகராவிற்கு கடுப்பை ஏற்படுத்தியிருக்கும் போல...

**கங்காணி:-** ஓ! அதால தான் விடுதலைப் புலிகளுக்கு அஞ்சலி செலுத்தின



## பிச்சைக்காரர்களை வைத்து வருமானம் உழைக்கும் முகவர்கள்

சர்வதேச மன்னிப்புச் சபையின்ர செயலாளர் நாயகம் அக்னெஸ் காலமார்ட், போரில் உயிரிழந்த இராணுவத்திற்கு அஞ்சலி செலுத்துவாரோ என வீரசேகரா கேட்டிருக்கிறார்.

**வாத்தியார்:-** இப்ப சரத்வீரசேகரா போன்றவர்கள் தான் எமக்குத் தேவையாக இருக்கினம்.

**பண்டிதர்:-** வாத்தியார் இதென்ன கதை சொல்லுறியள்.

**வாத்தியார்:-** பண்டிதர் ஐயா, இலங்கையில பேரினவாதிகளின்ர கருத்துக்கள் தொடர்பில உலகநாடுகள் மிகவும் கண்ணும் கருத்துமாக இருக்கினம்.

இந்தாப்பாருங்க, சர்வதேச மன்னிப்புச் சபையின் செயலாளர் நாயகம், முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் இடத்தில போரில உயிரிழந்த அப்பாவித் தமிழ் மக்களுக்கு அஞ்சலி செலுத்தினவா.

ஆனால் அதை சரத் வீரசேகரா திரிவுபடுத்தி முள்ளிவாய்க்காலில இறந்தவர்கள் அனைவரும் விடுதலைப் புலிகள் என்பது போலவும் சர்வதேச மன்னிப்புச் சபையின்ர செயலாளர் அக்னெஸ் காலமார்ட் அஞ்சலி செலுத்தினது போரில உயிரிழந்த விடுதலைப்புலிகளுக்கு என்பது போலவும் கதைகட்டியிருக்கிறார்.

சர்வதேச மன்னிப்புச் சபையின்ர செயலாளருக்கே இனவாதத்தோட கதைகட்டுகிற சரத்வீரசேகரா போன்றவர்கள் தான் இனி இந்த நாட்டைப் பிரிப்பினம்.

**விதானையார்:-** காலத்திற்குக் காலம் இந்த நாட்டில பேரினவாதிகள் தலைதூக்குகிற நிலைமை இருக்கத் தான் செய்யுது.

**சிறாப்பர்:-** நாங்கள் நினைக்கிற மாதிரி சரத்வீரசேகரா சுயமாகக் கதைக்கவில்லை.

அவரை அப்படிக் கதைக்குமாறு பேரினவாத ஆட்சித் தரப்பு கட்டளையிட்டிருக்குது.

அப்ப, அவர் தனக்கு ஒப்படைக்கப்பட்ட பணியை நிறைவேற்ற குலைக்கிறார் அவ்வளவு தான்.

**மூப்பர்:-** அதெண்டால் உண்மை தான். முன்பு சிறில் மத்தியு எண்டொரு சிங்கள அமைச்சர் இருந்தவர்.

தமிழ் மக்களுக்கு எதிராகக் கதைக்கிறது தான் அவற்ற வேலை.

அந்த நேரம் எதிர்க்கட்சித் தலைவராக இருந்த அ. அமிர்தலிங்கத்தை வெட்ட வேணும் கிழிக்க வேணும் எண்டு பாராளுமன்றத்தில பேசுவார்.

அவருக்கு உதவியாக அந்த நேரத்தில பாணந்துறை எம்பியாக இருந்த நெவில்பெணாண்டோ பக்க வாத்தியம் வாசிப்பார்.

இவர்கள் இருவரையும் அப்போதைய ஜே.ஆர். ஜெயவர்த்தனவின் அரசாங்கம் இனவாதத் தீயைக் கக்குவதற்காக நியமித்திருந்தது.

இப்ப சரத்வீரசேகரவை நியமித்திருக்குது. அவ்வளவு தான்.

இவ்வாறு மூப்பர் கூற, அந்நேரம் பார்த்து ஆலடிப்பிள்ளையார் கோவில் கண்டாமணியும் ஒலிக்க ஆலடியில் இருந்தவர்கள் எழுந்து கோயிலுக்குச் சென்றனர்.

ஆதித்தன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இந்தியாவின் 29 ஆவது மாநிலமாக இலங்கை மாறப்போகிறது என்கி றாரே வீரவன்ச?

**இளங்கோ மானிப்பாய்**

**அவலங்களோடு மக்கள் துடித்துக் கொண்டு இறந்தபோது பாராமுக மாக இருந்தவர்கள் இப்போது பரிவு காட்டுவது ஏமாற்றுவதற்குத்தானே வியாசரே?**

சோதனைக் கூடங்களில் இருக்கும் எலி களாய்க்கூட தமிழினத்தை சர்வதேசம் பார்க்கவில்லை என்பதே உண்மை. அந் தளவிற்கு தமது பலத்தைக் காட்ட, தயா ரித்த ஆயுதங்களை தமிழர் தலைகளில் கொட்டி சோதனை செய்தது சர்வதேச நாடுகள்.

அவர்களுக்கு இந்த உலகம் கொதி நிலை யில் இருப்பதே விருப்பம். அப்படியென் றால்தான் தங்கள் தயாரிப்புக்கள் விலை ப்படும்.அத்துடன் தம்மை மிஞ்சியவர்கள் யாருமில்லை என்பதை காட்டிக் கொண்டே இருக்கலாம் என்ற சிந்தனை. சர்வதேசத்திற்கு பிறநாடுகள் மீதான கரிசனை என்பது ஆடு நனைகிறது என்று ஓநாய் அழுத கதையே.

**ரதுசுதன் கிளிநொச்சி**

**பிறர் மனை நோக்காதே என்று வள்ளுவன் கூறியிருக்கின்றானே வியாசரே?**

ரீக்கடைக்காரன் எதிரே இருக்கும் யூஸ் கடையில் யூஸ் குடிப்பதும் யூஸ்கடை க்காரன் அருகே இருக்கும் ரீக்கடையில் ரீ குடிப்பதும் வழமையாகிவிட்டதைய்யா. இது காலக்கொடுமை கலியுகம். மாற்றம் ஏற்பட வாய்ப்பில்லை.

அது சரி மற்றவர் வீட்டை நோக்கினால் என்ன நோக்காமல் இருந்தால் என்ன இதில் உங்களுக்கு ஏதும் உள்குத்து இருக்கா.




**அன்பு வாசகர்களே!**
**உங்கள் எண்ணத்தில் தோன்றிய கேள்விகளை**
**076 097 3126**
**என்ற இலக்கத்திற்கு SMS செய்யுங்கள்**

**மதுவன் மீசாலை**

**இந்தியாவின் 29 ஆவது மாநிலமாக இலங்கை மாறப்போகிறது என்கி றாரே வீரவன்ச?**

இலங்கையின் தலையை சீனாவிடம் அடகு வைத்ததைப் பற்றியும் வைத்த வர்கள் பற்றியும் கதைக்காத, கவலை ப்படாத வீரவன்ச இந்தியாவைப் பற்றி அதிகம் பேசுவதற்குள் இருக்கும் முர ணைப் புரிந்த கொள்ள வேண்டும்.

அதாவது இந்தியா தமிழினத்திற்கு நல்லதைச் செய்து விடும் அப்படிச் செய்தால் தங்கள் அப்பளங்கள் தெற்கில் பொரியாமல் போய்விடும் என்ற பயமே இது.



தற்போதைய பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளை சமாதானப்படுத்துவதற்கு கைத்தொலைபேசியை அவர்களிடம் கொடு ப்பது சரியானதா வியாசரே?

**சுதன் குப்பிளான்**

**பாலஸ்தீனத்தை தனிநாடாக அங்கீக ரிக்கும் நோர்வே ஈழத்தமிழினத்தைக் கைவிட்டது ஏன்?**

இலங்கையில் சமாதானம் மலர இல ங்கை இராணுவத்திற்கும் தமிழீழ விடு தலைப்புலிகளுக்கும் இடையிலான பேச்சு வார்த்தைக்கு மத்தியஸ்தம் வகித்த நோர்வே நாடு, ஆயுத உற்பத்தியிலும் விற்பனையிலும் உலகில் முதல் ஐந்து நிலைகளிற்குள் இருக்கும் நாடு என்பது உங்களுக்குத் தெரியுமா?

இந்த உண்மை தெரியாமல் நாம் நோர்வே யையும் எரிக்சொல்கேய்மையும் நம்பி னோம்.

இறுதியில் சொல்கெய்ம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் சர்வதேச ஆலோசகராக இருக்கிறார் என்பது தான் முடிவு.

**கேமசுதன் கரவெட்டி**

**தற்போதைய பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளை சமாதானப்படுத்துவத ற்கு கைத்தொலைபேசியை அவர்களி டம் கொடுப்பது சரியானதா வியாசரே?**

பிள்ளைகளை சுயமாக சிந்திக்கும் மனி தர்களாக வளர்க்காவிட்டால் அவர்களின் எதிர்காலம் சூனியமாகிவிடும் என்பதை ஒவ்வொரு பெற்றோரும் மறந்து விடக் கூடாது.

தரம் 5 பரீட்சை, க.பொ.த சாதாரண தரம் , உயர்தரப் பரீட்சைகளுக்கு பிள்ளைக ளைத் தயார்படுத்துவது வேள்விக்கு வள ர்க்கப்படும் கடாய்களைப் போல என்றால் நிலை எவ்வாறிருக்கும்.

இதில் புதிதாக கையடக்கத் தொலைபேசி என்னும் அரக்கனும் இணைந்து விட்டான். இது எதிர்கால சந்ததியை சூனியமாக்கும். என்பதில் ஐயமேதும் இல்லை.

**டனுசாந் திருநெல்வேலி**

**போர்க்குற்றங்களுடன் தொடர்புடையவர்களை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திற்கு அனுப்ப வேண்டும் என பிரித்தானிய எதிர்க்கட்சி தெரிவித்திருக்கிறதே?**

சரியான கருத்து. ஆனாலும் கூற வேண்டிய கருத்தை கூறவேண்டிய நேரத்தில் கூறுவதனாலேயே பலன் ஏற்படும்.

பிரித்தானிய எதிர்க்கட்சி இக் கருத்தை தனது ஆட்சிக் காலத்தில் கூறியிருக்க வேண்டும்.அவ்வாறு கூறியிருந்தால் அதனால் பயன் ஏற்பட்டிருக்கும்.

இப்போது எதிர்க்கட்சி. எதிர்க்கட்சியிடமிருந்து வெளி வரும் கருத்து எதிர்மறையான கருத்து என்பது பரவலான சிந்தனை.

இந்த நேரத்தில் இந்தக் கருத்து தமிழ் மக்களுக்கு நன்மையைத் தருமா என்றால் சந்தேகமே.

**துஷிகரன் வடமராட்சி**

**இலங்கையர்களுடன் துணை நிற்போம் என்ற அமெ ரிக்கத் தூதுவரின் கருத்துத் தொடர்பில் தங்களின் கரு த்து என்ன?**

இலங்கையருடன் துணை நிற்போம் என்கின்றனரே தவிர ஈழத் தமிழினத்துடன் துணை நிற்போம் என்று கூறுகிறார்கள் இல்லையே.

தமிழினம் சிறுபான்மையினம். அந்த இனத்திற்கு விமோச னம் இல்லை. இந்த உலகில் அக்கிரமத்தை அழித்து அறத்தை நிலைநாட்ட பல மீட்பர்கள் உருவாகினர்.

ஆனால் தமிழினத்தை மீட்க எந்த மீட்பரும் உருவாகவில்லை. மீட்பரை அனுப்பும் அளவுக்கு தமிழினம் கஷ்டப்படவில்லை என்று கருதினாரோ என்னவோ, தமிழினம் இன்று வரை வேதனையில் தள்ளாடிக் கொண்டிருக்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காலத்தால் அழியாத கானங்கள்

படம்: வல்லவனுக்கு வல்லவன்
இசை: வேதா
பாடல்: கவியரசு கண்ணதாசன்
பாடியவர்: டி.எம்.சௌந்தரராஜன்



நூறுமுறை பிறந்தாலும்
நூறுமுறை இறந்தாலும்
உனைப் பிரிந்து வெகுதூரம் – நான்
ஒருநாளும் போவதில்லை
உலகத்தின் கண்களிலே
உருவங்கள் மறைந்தாலும்
ஒன்றான உள்ளங்கள்
ஒருநாளும் மறைவதில்லை!

ஓராயிரம் பார்வையிலே
உன் பார்வையை நான் அறிவேன்
உன் காலடி ஓசையிலே
உன் காதலை நான் அறிவேன்

ஓராயிரம் பார்வையிலே
உன் பார்வையை நான் அறிவேன்
உன் காலடி ஓசையிலே
உன் காதலை நான் அறிவேன்

இந்த மானிடக் காதலெல்லாம்
ஒரு மரணத்தில் மாறி விடும்
அந்த மலர்களின் வாசமெல்லாம்
ஒரு மாலைக்குள் வாடி விடும்
நம் காதலின் தீபம் மட்டும்
எந்த நாளிலும் கூட வரும்

ஓராயிரம் பார்வையிலே
உன் பார்வையை நான் அறிவேன்
உன் காலடி ஓசையிலே
உன் காதலை நான் அறிவேன்

இந்த காற்றினில் நான் கலந்தேன்
உன் கண்களை தழுவுகின்றேன்
இந்த ஆற்றினில் ஓடுகின்றேன்
உன் ஆடையில் ஆடுகின்றேன்
நான் போகின்ற பாதையெல்லாம்
உன் பூமுகம் காணுகின்றேன்

ஓராயிரம் பார்வையிலே
உன் பார்வையை நான் அறிவேன்
உன் காலடி ஓசையிலே
உன் காதலை நான் அறிவேன்

# இரண்டு அவதாரங்கள் மோதிக்கொண்டது ஏன்?

ராமாயணத்தில் ராமனும் பரசுராமனும் சந்தித்துக்கொண்ட நிகழ்வு அதிமுக்கியமானது. மிதிலை நகரில், சிவ தனுசை முறித்து வெற்றிகண்ட ஸ்ரீராமருக்கு மாலையிட்டுப் பெருமைப்படுத்தினாள் சீதாதேவி. விஸ்வாமித்திரரின் முயற்சியால் தசரதரின் குடும்பம் மிதிலைக்கு அழைத்துவரப்பட்டு முறைப்படி திருமணமும் நடந்தேறியது. பிறகு புதல்வர்களுடன் அயோத்திக்குப் பயணமானார் தசரதர்.

மனநிறைவுடன் பயணித்த தசரதர், வழியில் கோடரி ஏந்தியபடி ஆவேசத்துடன் வரும் பரசுராமரைக் கண்டதும் நிலைகுலைந்தார். அவர் ஷத்திரியர்களுக்குப் பகைவர். தன் மகன் ஸ்ரீராமன் இவரது கோடரிக்கு இரையாகிவிடக் கூடாதே என்று தவித்தார்.

பரசுராமரைக் குளிர்விக்கும்பொருட்டு, சட்டென்று தேரில் இருந்து இறங்கி ஓடோடிச் சென்று, 'வாருங்கள், வாருங்கள். தங்கள் வரவு நல்வரவாகுக' என்றபடி, அவரது பாதங்களைத் தொட்டு வணங்க முயன்றார். தசரதரைத் தன் இடக்கரத்தால் தடுத்துப் புறம் தள்ளிய பரசுராமர், 'சிவ தனுசை முறித்தவன் யார்?' என்று கர்ஜித்தபடி, ஸ்ரீராமனை நெருங்கினார்.

"சிவ தனுசை முறித்தது உன் வீரத்துக்கு அழகல்ல. மிகவும் பழைமையான, பலரது கைகளால் பயன்படுத்தப்பட்டு, பலம் குன்றி, உளுத்துப்போய், எந்த நிமிடமும் உடையும் நிலையில் இருந்த தனுசை முறித்தது எப்படி வீரமாகும்... இதோ, இந்த விஷ்ணு தனுசில் நாணேற்றி, உனது வீரத்தை வெளிப்படுத்து, பார்ப்போம்" என்றபடி, தன்னிடமிருந்த தனுசை நீட்டினார் பரசுராமர்.


அவரை வணங்கிய ஸ்ரீராமர் அமைதி பெறுங்கள். தங்களுடன் மோதுவது எங்கள் பணியன்று. அந்தணர்களையும் ஆவினங்களையும் காப்பதே எங்கள் கடமை. வேதத்தையும் வேள்வியையும் காப்பாற்றப் பயன்படும் இந்த இரண்டு இனங்களுக்கும் பாதுகாவலர்கள் நாங்கள். எனவே, அறத்துக்குப் புறம்பாகச் செயற்பட மாட்டேன். தங்களுடன் மோத இயலாது' என்று மறுத்தார்.

அதைக் கேட்டு, பரசுராமரின் கோபம் அதிகரித்தது. 'உனது கையாலாகாத்தனம், அறத்தை முன்வைத்துத் தப்பிக்க நினைக்கிறதா? என்னுடன் மோதுவதற்கு பயந்து கோழைத்தனமாகப் பின்வாங்குகிறாயே...' என்றெல்லாம் பேசி, ஸ்ரீராமனின் வீரத்தை உசுப்பேற்றினார் பரசுராமர். ஆனால் ஸ்ரீராமரோ, "அந்தணர்களிடம் வீரம் காட்டுவது எங்களுக்கு இழுக்கு அவர்களைத் தலைவணங்குவதே முறை. தங்களையும் வணங்குகிறேன். இதோ, என் கழுத்து தங்கள் கையில் கோடரி. தங்களுக்கு என்ன செய்யத் தோன்று கிறதோ, அதைச் செய்யுங்கள்' என்று தலைகுனிந்து கழுத்தைக் காட்டினார் ஸ்ரீராமர்.

பரசுராமரோ தனது நிலையிலிருந்து மாறவில்லை. தலை வணங்கினாலும் விடமாட்டேன் என்று அடம்பிடித்தார். வேறு வழியின்றி பரசுராமரிடமிருந்து விஷ்ணு தனுசை வாங்கினார் ஸ்ரீராமர். நாணேற்றி பாணம் தொடுக்கத் தயாரானார். விஷ்ணு தனுசு கைமாறும் வேளை... பரசுராமரின் தெய்வ அம்சமும் பலமும் தனுசுடன் சேர்த்து ஸ்ரீராமனில் கலந்தன.

அவரிடம், 'ராம பாணம் வீணாகாது. உங்கள் தவப் பயன்களை எனது பாணத்துக்கு இரையாக்குங்கள். அல்லது தங்களின் உயிரை அளித்துவிடுங்கள். தங்களின் விருப்பம்போல் செயற்படலாம்' என்றார் ஸ்ரீராமன். பரசுராமர், தான் சேமித்த தவப் பயன்களை ராமனுக்கு அளித்துவிட்டு, மீண்டும் தவம் செய்வதற்காக மஹேந்திர பர்வதம் நோக்கிப் பயணமானார்.

ஸ்ரீராமனுடன் மோதவரவில்லை பரசுராமர். விஷ்ணு தனுசையும் தனது அம்சத்தையும் ஸ்ரீராமனுடன் இணைக்க வந்தார். ராவணனை அழிக்க ஸ்ரீராமருக்கு விஷ்ணு தனுசு தேவை. அதையறிந்தே, தக்க தருணத்தில் அந்தத் தனுசை ஒப்படைக்க முன் வந்தார் பரசுராமர். அத்துடன் தனது அவதார வேலையையும் முடித்துக் கொண்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேர்தலை குறிவைக்கும் வாக்குறுதி அரசியல்



தமிழ் அரசியல் தலைவர்களில் தந்தை செல்வா போன்றதொரு உண்மையான, நேர்மையான அரசியல் தலைவர் ஒருவர் இனியொருபோதும் தமிழினத்துக்கும் கிடைக்கப்போவதில்லை.

தந்தை செல்வா ஒரு தீர்க்கதரிசி. தமிழ் மக்கள் தமது முழு உரிமைகளையும் பெற்று தமது சொந்த நிலத்தில் நிம்மதியாக வாழ வேண்டும் என அவர் பாடுபட்டார்.

அதன் பின் வந்த தமிழ் தலைவர்கள் எவரிடமும் தந்தை செல்வா போன்ற அர்ப்பணிப்பும், நேர்மையும் இருக்கவில்லை என்பது மறுக்க முடியாத உண்மை.

இதை இப்போதயை தலைவர்கள் மறுக்கவும் மாட்டார்கள்.

ஏனென்றால் தமது அரசியல் தளம் எந்த நிலையில் நிற்கிறது என்பதை அவர்கள் நன்கறிவர். ஆதலால் தந்தை செல்வாவுடன் தம்மை ஒருபோதும் ஒப்பிட்டு நோக்கவும் மாட்டார்கள். அதை விரும்பவும் மாட்டார்கள்.

தந்தை செல்வாவின் பின் தோன்றிய அரசியல் தலைவர்களிடம் அவருக்கிருந்த தீர்க்கதரிசனமும் ஒப்பில்லா அர்ப்பணிப்பும் ஏன் இருக்கவில்லை என்பதை கூர்ந்து கவனிக்க வேண்டும்.

அதற்கு ஒரே பதில் சுயநல அரசியல் என்பதேயாகும்.

ஆம், எப்படியாவது தேர்தலில் வெற்றி பெற்று பாராளுமன்றம் சென்று விட வேண்டும் எனும் அதீத எண்ணம் தமிழ் மக்கள் மீதான அக்கறையை மறைத்து விட, தமது வெற்றிக்காய் உழைக்கத் தொடங்கினர்.

அதற்காக கோடிகளை விட்டெறியவும் தயங்காமல் இருந்தனர். இதனூடே தம்மை பலம் மிக்க, தமிழ் மக்களுக்கு தீர்வைப் பெற்றுத் தரவல்ல ஒரு தலைவராய் காட்ட முற்பட்டனர். அதில் அவர்கள் வெற்றியும் கண்டனர்.

இங்கு தான் தமிழ் மக்கள் ஏமாறத் தொடங்கினர். இவர்களின் மாயாஜாலப் பேச்சு தமிழ் மக்களிடம் எடுபட்டுப் போக அவர்கள் தொடர்ந்து வெற்றி வாகை சூடிக் கொண்டனர்.

கட்சி பேதம் மறந்து தமிழ் மக்களுக்கு தீர்வைப் பெற்றுத்தர ஒன்றிணைவோம் என அறிக்கையிடும் இவர்களின் சுயரூபம் தேர்தல் வந்தால் தெரிந்துவிடும்.

காய்க்குள் பழமோடும் வேலைகளை மிகச் சமார்தியமாகச் செய்து முடித்து விட்டு அமைதியாய் இருப்பது தான் இவர்களின் வடிவம்.

எதிர்ப்பு அரசியல் என்பதை வெளிப்படையாக காட்டிக் கொள்ளும் அவர்கள் தெற்கு ஆட்சியாளர்களின் நிகழ்ச்சி நிரலிலே அனேகம் இயங்குவார்கள்.

பாராளுமன்றில் எடுக்கப்படும் தீர்மானமங்களுக்கு நாம் என்ன சொல்ல வேண்டும் என்பதை கட்சிமுடிவெடுப்பதிலும் ஆட்சியாளர்களின் முடிவுக்காக காத்திருப்பதாகவும், அதற்குள் சம்திங் சம்திங் இருப்பதாயும் பல தகவல்கள் அரசல் புரசலாய் கசிந்தாலும் இது இவர்களின் தேர்தல் வெற்றியை ஒரு நாளும் பாதித்தது இல்லை என்பது தான் வியப்பு.

தற்போது கூட எழுந்துள்ள, ஜனாதிபதி பொது வேட்பாளர் விடயத்தில் அமைதியாய் இருப்பதற்குள்ளும்; அல்ல பொது வேட்பாளர் தேவை தான் என அடித்துக் கூறுவதற்குள்ளும் யாருக்கோ உதவி புரியத் தலைப்பட்டுவிட்டார்கள் என்பது உறுதி.

என்ன செய்வது தமிழினத்தின் விதி தமிழினத்தை உய்ய விடாமல் வாட்டி வதைக்கிறது.

வன்னிப் பெருநிலப்பரப்பில் நடந்த அநீதிகளை கேட்க நாதியின்றி இருக்கும் நிலையில் போர்க்குற்ற மீறல் விசாரணைகள் நடந்து முடிந்து விட்டதாய் கூறும் அளவில் நிலை இருக்கிறது.

இங்குதான் தந்தை செல்வாவின் அர்ப்பணிப்பான செயற்பணியை தமிழினம் உற்று நோக்கிப் பார்க்க வேண்டும். அவரின் தீர்க்கதரிசன பேச்சுக்களை நுணுகி அவதானிக்க வேண்டும்.

"தமிழினத்தை கடவுள் தான் காப்பாற்ற வேண்டும்" என அவர் கூறியதற்குள் இருக்கும் ஆழ்ந்த பொருளை விளங்கிக் கொள்ள வேண்டும்

இந்த மாற்றம் தமிழினத்திடம் ஏற்பட்டாலே தந்தை செல்வா போன்றதொரு தலைவரை காணமுடியும். இல்லையேல் அதே முகங்கள். அதே வீரவசனங்கள் கேட்டுக் கேட்டு காது புளித்து விட்டது.

**அபிமன்யு**

---

பிரித்தானியா மற்றும் பிரான்சில் சாதனை படைத்த ஈழத்தமிழ் இளைஞர்கள் தொடர்பில் தென்னிலங்கை ஊடகங்கள் பல தகவலகள் வெளியிட்டுள்ளன.

தமிழர்களுக்கு எதிராக இனவாத சித்தாந்தங்களை தென்னிலங்கை மக்கள் மத்தியில் விதைக்கும், சிங்கள ஊடகங்கள் கூட அவர்களைப் பெருமைப்படுத்தி முன்னிலையாக செய்திகள் வெளியிட்டுள்ளன.

## பிரின் பிரதாபன்



அண்மை யில் பிரித்தானி யாவில் நடை பெற்ற மிகப் பெரிய சமை யல் போட்டியில் மாஸ்டர்செஃப் செம்பியன் 2024 என்ற மதிப்பு மிக்க பட் டத்தை ஈழத் தமிழ் இளைஞன் வென்று ள்ளார்.

யாழ்ப்பாணம், உரும்பிராய் பகுதியை சேர்ந்தவரும் பிரித்தானிய குடியுரிமை பெற்றவருமான பிரின் பிரதாபன் இந்த பட்டத்தை பெற்றுள்ளார்

# சாதனை புரியும் ஈழத்து இளைஞர்கள்

## தர்ஷன் செல்வராஜா



பிரான்ஸில் கடந்த வருடம் நடைபெற்ற சிறப்புமிக்க பாண் தயாரிப் பில் வவுனி யாவைச் சேர் ந்த தர்ஷன் செல்வராஜா என்பர் முதலி டம் பெற்றிருந் தார்.

இதன்மூலம் பிரான்ஸ் ஜனாதிபதி மாளிகையான எலிசேக்கு ஒரு வருடத்திற்கான உணவு வழங்கும் வாய்ப்பினையும் பெற்றிருந்தார்

புலம்பெயர் நாடுகளில் இலங்கையை சேர்ந்த பல தமிழர்கள் பல்வேறு துறைகளில் சாதனையாளராக உள்ளதாக பல தென்னிலங்கைவாசிகள் சமூக வலைத்தளங்களில் பதிவிட்டுள்ளமை குறிப்பிடத் தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிதைக் கலசம்



## நமெக்கென்று ஒரு விதி

தலைமை தொலைந்து
தறி கெட்டு
திக்குத் தெரியாது
சிக்கி தவிக்க

போரின் கொடுமைகள்
நீதியின்றி
காலத்தால் கரைந்து போக
காணாமல் போனோரின்
கணக்குகள் முடிவின்றி
தொடர்ந்து போக

நம் நிலமெல்லாம்
மெல்ல மெல்ல
நம்மை விட்டு
விடை கொடுக்க

ஆலயங்கள் அருகே
விகாரைகள் அடிவைக்க
துன்பமே தொடர் கதையாய்
நீண்டு செல்ல

பேருக்கு ஒரு ஆளும்
ஆளுக்கொரு கட்சியுமாய்
ஒற்றுமையை ஓரம் கட்டி
இன்னும் திருந்தாத உள்ளங்களாய்
இது என்ன அரசியல்

பாடுமையா பரமசிவனே
பாவியர் நம் தமிழினத்தை

**தேன் நிலா**

## வாழ்வே மாயம்

வாழ்க்கையென்பது புத்தகம்
வரையறை தேவைகளை பூர்த்தி செய்யுமத்தியாயம்
வந்தது தெரியும் போவது எங்கே-இதன்
காரசாரம் யாருக்கு புரியும்

காத்திருப்பு கடைசி வரையும்
கடவுளின் கணக்கு தீர்ப்பு வரும்வரை
உத்தமம் பூப்போல மலருமுதிரும்
உண்மைக்கு வரைவிலக்கணமேது
மறு ஜென்மம் காணும் கதையினை விடு

பத்தோடு ஒன்றாய் பழகி
பண்போடு வாழ பகை மறந்து
சோகங்கள் விலகிடும் திரை போலவும்
சொந்தங்கள் கூடியேஉறவாடும் நிஜங்கள்

விந்தையான இவ்வுலகினை புரிந்து கொண்ட மனிதனுமில்லை
- இப்பிரபஞ்சத்தில்
விருந்தாளிகள் தான் மனிதம் விரும்பியோ, விரும்பாமலோ
வியர்த்தகம் புரிந்து வாழ்க்கைப் பயணத்தில் வெற்றிக்கொடி நாட்டு
சவால்களை வென்று வாழ்ந்து காட்டு
வாழ்வே மாயம் தான்

**கவியசரன் K.J.**

## மௌனத்தின் தேடல்-717



### சரித்திரம் அழியுமா?

விழிகளில் கண்ணீர் மல்க
புலம்பிக் கதறும் அன்னை
மலர் ஏற்றும் தீபச்சுடர்
கொந்தளிக்கும் உள்ளத்தோடு
உறவினர் குவிந்து
நிற்கும் சோகக்காட்சி
வருடங்கள் பதினெட்டு
கடந்தாலும் கூட
பல வருடங்கள் அழியாது
சோகச் சரித்திரம்

**அபிஇலம்ரலிகா, சித்தன்கேணி.**

### நெஞ்சம் மறப்பதில்லை

இயற்கையான சீற்றங்கள்
இயல்பைப் பாதித்தால்
இறைவன் சோதிப்பதாய்
பிழைகளைச் சரி செய்வர்
செயற்கையான கொடுமைகள்
செய்தியில் சூடு பிடிக்கையில்
ஆற்றுப்படுத்த முடிவதில்லை
தேற்றவும் தெம்பு வேண்டுமாயினும்
இறுதியில் தர்மம் வெல்லுமென்னும்
உறுதியில் மர்மம் ஏதுமில்லை

**க.நாகராசா, நுணாவில்.**

### இறைவா பதில் சொல்?

ஆண்டுகள் பல ஓடி மறைந்தன
ஆயினும் உம் நினைவுகள்
ஆறாத ரணமாய் வலிக்கிறது
எம் நெஞ்சங்களில்
கோடி கொடுத்தாலும் கிடைக்காத
உயிரை எடுத்துவிட்டு
இழப்பீடு தருகிறோம் என்பவர்களுக்கு
மனச்சாட்சி உண்டா?
மனிதாபிமானம் உண்டா?
இறைவா பதில் சொல்?

**இ.உதிலீரன்**

### இது எப்படி நிஜமாகும்?

அழிவின் கதையை
ஒளியேற்றி மடிந்த எம்
உறவுகளை தேடித்தேடி
கதறி அழுகிறோம்
விடிவு தருவோம் என்கிறார்கள்
இருளைக் கொடுத்தவர்கள்
இது எப்படி நிஜமாகும்?

**இந்திரபுத்திரன்**

### ஆற்றாமையின் வலி

முள்ளிவாய்க்கால் மண்ணிலே
மக்கள் மாண்டு போகுமளவுக்கு
கோரத்தாண்டவமாடி கொத்துக் கொத்தாய்
குண்டுகள் போட்டு
பச்சிளம் பாலகர் முதல் பாடுபட்ட பெரியோர் வரை
பரலோகம் செல்ல வைத்த பாதகரே
ஆற்றாமை வலியை ஆறுதலடையச் செய்ய
ஆண்டு தோறும் வரும் வைகாசி பதினெட்டில்
ஆற்றொணாத் துயர் பகிர்ந்து
கதறியழும் உறவினர்களுடன் நாமும்
மலர் தூவி அஞ்சலி செலுத்துவோம்

**ஆ.செல்வி, திருநாவலூர்**

### அழியாத ஓவியங்கள்

ஆண்டாண்டு தோறும் அழுது புரண்டாலும்
மாண்டவர் மீண்டிலர் ஆனாலும்
கண்முன்னே வாழ்ந்த கண் கண்ட தெய்வங்கள்
கணப்பொழுதில் கனவு போல்
மாயமாய் மறைந்து விட்டால்
பாச உறவுகளின் நெஞ்சம் தான்
பொறுத்திடுமோ என்றும்
அழியாத ஓவியமாய் அவர் தம் மனங்களில் பதிந்திருப்பாரே

**சி.மகாலட்சுமி**
**கொக்குவில்**

## மௌனத்தின் தேடல்- 718



அன்பு வாசகர்களே உங்கள் மனதில் தோன்றும் கவிதை, வியாசர் பதில்களை ... மௌனத்தின் தேடல், வலம்புரி- சங்குநாதம்,
இல.191, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
எனும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# களம் பல கண்ட யாழ் கோட்டை


11 செங்கை ஆழியான்

எனவே, போர்த்துக்கேயரின் ஆதிக்கத்தினுள் இருக்கும் வட ஆள்புலம் கைப்பற்றப்பட வேண்டியது என ஒல்லாந்தத் தேசாதிபதி விரும்பினான். அதனை நிறைவேற்றுவதற்குரிய தளபதியாக ஆட்மிறல் றைக்ளொவ் வன் ஹூன்ஸ் என்பவன் தெரிவானான. வன்ஹூன்ஸ்க்கு வயது 39.

1500 வீரர்களைக் கொண்ட படையுடனும் பத்தொன்பது யுத்த மரக்கலங்களுடனும் மன்னாரை நோக்கிப் புறப்பட்டான். அக்காலவேளையில் இந்து சமுத்திரத்தில் எதிரிப் போர்க்கலங்களுக்குப் பெரும் சிம்ம சொப்பனமாக விளங்கிய நார்டென் என்ற யுத்தக் கப்பல் ஒல்லாந்தக் கப்பல்களுக்கு வழிகாட்டி வந்தது.

ஒல்லாந்தப் படைகள் மன்னார்க் கோட்டையைக் கைப்பற்றிக் கொண்டன. மன்னார்க் கோட்டையைக் கைப்பற்றியதும், தனது படைவீரர்களை இரு பிரிவுகளாகப் பிரித்து, ஒன்றைக் கரையோர நிலப்பாதை வழியே பூநகரிக்கூடாக யாழ்ப்பாணத்திற்கு கச்சாய் வன்னிமை வழிகாட்ட வழி நடத்தி வந்தான். அவனது கப்பல்கள் கடல் மார்க்கமாக ஊர்காவற்றுறைக் கோட்டையைக் கைப்பற்றுவதற்காக விரைந்தன.

ஒல்லாந்தப் படைகளை நடத்தி வந்த றைக்ளோவ் வன்ஹூன்ஸ்சை யாழ்ப்பாணத்து மக்கள் வன்கோயன் எனக் குறிப்பிட்டனர். இன்னும் பெரிய ஒல்லாந்தேச எனவும் அழைத்தனர்.

மார்ச் மாதம் 9 ஆம் திகதி ஒல்லாந்தப் படை யாழ்ப்பாணத்திலிருந்த யேசுசபைக் கல்லூரியையும், டொமினிக்கன் சபை ஆலயத்தையும், மடத்தையும் கைப்பற்றிக் கொண்டது. கோட்டைக்கு வெளியில் சீதாரியின் (பறங்கித்தெரு) இருந்த போர்த்துக்கேயர் அனைவரும் ஒல்லாந்தப் படைக்கு அஞ்சி யாழ்ப்பாணக் கோட்டைக்குள் புகுந்துகொண்டனர்.

யாழ்ப்பாணக் கோட்டையை ஒல்லாந்தர் முற்றுகையிட்டனர். அவர்கள் கோட்டையைச் சுற்றித் தரைப்புறமாகப் பாசறை அமைத்துக்கொண்டனர். ஊர்காவற்றுறைக் கோட்டையைக் கைப்பற்றிய பின், யாழ்ப்பாணக் கடனீரேரிக்குள் பிரவேசித்த ஒல்லாந்தக் கப்பல்கள் கொமுசாறி (தளபதி)யின் கட்டளைக்காகக் காத்திருந்தன. மார்ச் மாதம் 16 ஆம் திகதியிலிருந்து ஜூன் மாதம் 21 ஆம் திகதி வரை ஒல்லாந்தரின் முற்றுகை தொடர்ந்தது.

போர்த்துக்கேயரின் பலம் வாய்ந்த யாழ்ப்பாணக் கோட்டையின் நாலா பக்கங்களிலும் ஒல்லாந்தப் படை சூழ்ந்து கொண்டது. அவ்வேளை யாழ்ப்பாண நகரம் ஒரு சிறிய பட்டினமாக இருந்தது. சத்திரம், பொதுக் கிணறு என்பன அமைந்திருந்தன.

(தொடரும்...)

# கடல் புறா

## வணங்காத தலை! இணங்காத குரல்!



காலத்தின் பதிவு 109

"சம்மதம், சம்மதம்," என்று கொள்ளையரிடமிருந்து மட்டுமின்றி நகர மக்களிடமிருந்தும் குரல்கள் கிளம்பி வானைப் பிளந்தன.

பலவர்மன் உள்ளம் பெரும் எரிமலையாகிக் கொண்டிருந்தது. இளையபல்லவன் கூறிய திட்டம், தான் வகுத்த திட்டம் தானென்றாலும், பெண்ணை மணக்கக் கட்டாயம் செய்து கோட்டை பாதுகாப்பையும் ஒப்படைக்க தான் திட்டம் வகுத்தது உண்மை தானென்றாலும் அந்தத் திட்டத்தில் இளைய பல்லவன் அத்தனை வலுவில் வந்து வேண்டுமென்று விழுந்ததன் காரணம் புரியவில்லை பலவர்மனுக்கு.

பாலூர்ப் பெருந்துறையில் காஞ்சனாதேவிக்கும் இளைய பல்லவனுக்கும் ஏற்பட்ட உறவைப் பற்றி வந்த வதந்திகளை அறிந்திருந்த பலவர்மன், அத்தனை எளிதில் மஞ்சளழகியை மணக்க இளைய பல்லவன் ஒப்புவானென்பதை எதிர்பார்க்கவில்லை.

கலிங்கத்தின் படைபலத்தை அழிக்க வந்ததாகவும், அதற்காகவே கடற்படை திரட்டத் தன் உத்தேசமென்றும், தன்னிடம் நேரிடையாக அறிவித்த இளையபல்லவன், மறுநாளே கலிங்கத்துடன் நட்பு கொண்டு சோழரிடம் தீராப் பகைமையுள்ள ஸ்ரீவிஜய சாம்ராஜ்யாதிபதியின் கோட்டைத் தளபதியிடம் பணிபுரிய ஏன் தீர்மானித்தான் என்பது விளங்கவில்லை பலவர்மனுக்கு.

ஒன்றுமட்டும் விளங்கியது அவனுக்கு. ஏதோ பெரும் சூது இளைய பல்லவன் போக்கின் அடிப்படையாக அமைந்துள்ளது என்பதை மட்டும் புரிந்துகொண்டான் பலவர்மன்.

அது என்ன என்பதை உடனே அறிந்துகொள்ள முடியாததால் பொறுத்துப் பார்க்க முடிவு செய்தான்.

ஆகவே இளையபல்லவன் மேற்கொண்டு செய்ய முயன்ற எதையும் அவன் தடை செய்யவில்லை.

கோட்டையைப் பாதுகாப்பதாக இளையபல்லவன் அந்தக் கூட்டத்துக்கு உறுதி கூறிவிட்டு நிதிப் பெட்டிகளை மாளிகைக்குள் எடுத்துச் செல்லத் தன் மாலுமிகளுக்கு உத்தரவிட்டதையும் அவன் தடை செய்யவில்லை.

மாளிகைத் தளத்தில் கடற்கரையையும் பகிட்பாரிஸான் மலையையும் நோக்கியிருந்த இரு வாசல் அறையை படைத் தலைவன் ஆக்கிரமித்துக் கொண்டதையும் அவன் தடை செய்யவில்லை. அடுத்த மூன்று நாள்களில் கோட்டைப் பாதுகாப்பில் நடந்த மாறுதல்களையும் அவன் தடுக்கவில்லை.

ஆனால் இளையபல்லவன் நடவடிக்கை ஒவ்வொன்றையும் அவன் ஒற்றர்களால் கவனித்து வந்தான். சுமார் ஒரு வாரம் கழிந்தது. அந்த வாரத்தின் ஒவ்வொரு நாளும் எதையோ எதிர்பார்த்துக் கொண்டு நள்ளிரவு வரை விழித்துக்கொண்டே அவன் உட்கார்ந்திருந்தான். வாரம் முடிவடையும் நாள் அது. அந்த நாளிரவில் அவன் எதிர்பார்த்தது நடந்தது.

நள்ளிரவு வந்ததும் இரண்டு கோட்டான்கள் தூரத்திலிருந்து பலமாகக் கூவின. அதைக் கேட்டதும் பலவர்மன் தன் மஞ்சத்திலிருந்து எழுந்து பெரும் போர்வையொன்றால் தன் தலைக்கு முக்காடிட்டு உடலையும் போர்த்திக்கொண்டு மாளிகையின் பின்புறம் சென்றான். அங்கிருந்த மரத்தின் நிழலில் இருவர் நின்றிருந்தனர். அவர்களில் ஒருவன் பலவர்மனுக்குத் தலை வணங்கினான். மற்றொருவன் வணங்காத தலையுடனும் அலட்சியமும் கோபமும் நிரம்பிய பார்வையுடனும் நின்றிருந்தான்.

பலவர்மனைக் கண்டதும் பலவர்மன் கருத்துக்குச் சற்றும் இணங்காத குரலில் சொற்களும் அவன் உதடுகளிலிருந்து உதிர்ந்தன. (தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'நித்திலம் தொகுத்து வழங்கும்'
சுகமான விடியல்
401
வலம்புரியின் மருத்துவச்சுடர்

# உடற்பயிற்சி இல்லாதிருப்பது புகைத்தலுக்கு சமன்

சிகரெட் புகையிலிருக்கும் 3500 இற்கும் அதிகமான நச்சுப் பதார்த்தங்கள் மனிதனில் இருதய நோய்கள், புற்றுநோய்கள், சுவாச நோய்கள், பாலியல் குறைபாடுகள், பாரிசவாதம் போன்ற பல நோய்களை ஏற்படுத்தி மனிதனின் வாழ்நாளினை குறைக்கிறது என்பது அனைவரும் அறிந்ததே. புகைத்துக்கொண்டிருப்பவரின் அருகில் இருப்பதும் ஆபத்தானது என்பதை நாம் அறிவோம்.

புகைப்பிடிப்பவர்களுக்கு இருதயநோய் ஏற்படும் சந்தர்ப்பம் இரட்டிப்படைகிறது என்று ஆய்வுகள் தெளிவுபடுத்திநிற்கின்றன. உடற்பயிற்சி செய்யாதிருப்பது இருதயநோய்கள் ஏற்படும் சந்தர்ப்பத்தை இரண்டு மடங்காக அதிகரிக்கச் செய்கின்றன.

அதாவது புகைப்பிடிப்பதால் மாரடைப்பு ஏற்படும் சந்தர்ப்பமும் ஏறத்தாழ சமமானவை என கணிப்பிடப்படுகிறது. நாம் ஒழுங்காக உடற்பயிற்சி செய்துவருவோமாக இருந்தால் புற்றுநோய், நீரிழிவு, பாரிச்வாதம், மாரடைப்பு, உயர் குருதி அமுக்கம், நுரையீரல் நோய்கள் போன்றவை ஏற்படும் சந்தர்ப்பத்தை பெருமளவு குறைத்துக்கொள்ள முடியும்.



அத்துடன் ஒழுங்கான உடற்பயிற்சி மூலம் எலும்பு மூட்டுக்களின் ஆரோக்கியத்தை மேம்படுத்த முடியும். இதற்கு மேலதிகமாக மன அழுத்தத்தை குறைத்து உள ஆரோக்கியத்தை மேம்படுத்துவதற்கும் இது உறுதுணையாக அமைகிறது.


நடத்தல், சைக்கிள் ஓடுதல், நடனம், நீச்சல், மைதான விளையாட்டுக்கள், வீட்டுவேலைகளை செய்தல் போன்ற சிறியபயிற்சிகள் அழகான உடலமைப்பையும் ஆரோக்கியத்தையும் தருவதுடன் உடல் நிறை பராமரிப்புக்கும் உறுதுணையாக அமையும். உடற்பயற்சி இல்லாமல் இருப்பது ஆபத்தானது என்பதை மனதில் நிறுத்துவோம்.

Dr.சி.சிவன்சுதன்,
வைத்திய நிபுணர்,
யாழ்.போதனா வைத்தியசாலை.

# அநாவசியமான கட்டுப்பாடுகள்

வாழ்க்கையில் விதிக்கப்படும் அநாவசியமான கட்டுப்பாடுகள் மனிதனின் உடல் உள சமூக நன்னிலையாகிய உண்மையான சுகதர நிலையை பாதிக்கும் என ஆய்வுகள் உறுதி செய்கின்றன.

சுவையாக உண்பதும் வாழ்க்கையின் ஒரு முக்கிய அம்சம் என்பதை யாரும் மறுக்க முடியாது. சுவையான உணவு வகைகளை யாரும் தியாகம் செய்ய வேண்டிய அவசியம் இல்லை. உப்பு, உறைப்பு, புளிப்பு, இனிப்பு போன்ற அனைத்து சுவைகளும் ஆபத்தானவை என எண்ணிக் கொள்கிறோம்.



ஐஸ்கிறீம், பாயாசம் போன்றவற்றை உண்ணும் பொழுது குற்ற உணர்வுக்கு ஆளாகின்றோம். உப்பு உடல் ஆரோக்கியத்திற்கு இன்றியமையாதது. உப்பின் அளவு உடலில் குறைந்து விட்டால் அது பல தீய விளைவுகளுக்கு வழி வகுக்கும். வெப்ப வலயநாடுகளில் வசிக்கும் மக்களுக்கு ஒப்பீட்டளவில் அதிகளவு உப்பு தேவைப்படுகிறது. காரணம் வியர்வையின் மூலம் பெருமளவு உப்பு இழக்கப்படுத்தலாகும்.

எனவே உயர்குருதியமுக்கம் உள்ளவர்கள் கூட போதியளவு உப்பை தினந்தோறும் உள்ளெடுப்பது நல்லது. உப்பின் முக்கியத்துவம் அறிந்தே எம் முன்னோர் "உப்பில்லா பண்டம் குப்பையிலே" "உப்பிட்டவரை உள்ளளவும் நினை" என்பது போன்ற பல உப்பை பற்றிய விடயங்களை கூறி வைத்திருக்கிறார்கள். எனவே போதியளவு உப்பு சேர்த்து கறி சமைக்க பயப்பட வேண்டிய அவசியமில்லை. ஆனால் அளவுக்கு அதிகமான உப்பை உணவிலே சேர்த்துக் கொள்வதை தவிர்ப்பது நல்லது.இதே போன்று உணவிலே உறைப்பு, புளிப்பு சுவைகளை சேர்ப்பதனால் தீயவிளைவுகள் எதுவும் ஏற்பட்டு விடப் போவதில்லை. இவை உணவின் சுவையை மெருகேற்றும் என்பதுடன் சமிபாட்டிற்கும் உறுதுணையாக இருக்கும். ஆனால் அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சு என்ற விடயத்தை மறந்துவிடலாகாது.

பால், முட்டை போன்றவற்றை போதியளவிலே உணவிலே சேர்த்துக் கொள்ள முடியும். இவை இயற்கையான பாதுகாப்பான நிறையுணவுகளாகும். வெங்காயம், உள்ளி இயற்கையான வாசனைத் திரவியங்கள் போன்றவற்றை நீரிழிவு, இருதய நோய் உள்ளவர்கள் கூட போதியளவு உண்ண முடியும். சுகதேகிகளும் நோய்க்கு ஆட்பட்டவர்களும் உணவை சுவையானதாக சமைத்து உண்ணும் பொழுது அவர்களின் உடல் உள ஆரோக்கியம் மேம்படும்.

Dr. சி.சிவன்சுதன்,
வைத்திய நிபுணர்,
யாழ்.போதனா வைத்தியசாலை.

**பலருக்கு பயன்படக்கூடிய ஆரோக்கியம் சம்பந்தமான அல்லது உளவியல் சமூக மேம்பாடு சம்பந்தமான உங்கள் சந்தேகங்களை (thamilhealth@gmail.com) என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்கவும். அதற்கான எமது பதில்கள் இங்கு பிரசுரிக்கப்படும்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளிநொச்சியில் ஆயிரம் பேருக்கு காணி உறுதிகள் வழங்கி வைப்பு




(முறிகண்டி)

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் எண்ணக்கருவில் "உறுமய" தேசிய வேலைத்திட்டத்தின் கீழ் 20 லட்சம் காணி உறுதிகள் வழங்கி வைக்கும் நிகழ்வு இடம்பெற்று வருகிறது.

அந்த வகையில் கிளிநொச்சி மாவட்டத்தில் நேற்று 1000 பேருக்கு காணி உறுதிப்பத்திரங்கள் வழங்கி வைக்கப்பட்டன.

நிகழ்வில் கலந்துகொண்ட ஜனாதிபதி மக்களுக்கான காணி உறுதிப்பத்திரங்களை வழங்கி வைத்தார். (நி-6)

மதுபானசாலை அனுமதிப்பத்திரங்கள்

# அதிக விலைக்கு விற்பனை செய்தால் அனுமதிப் பத்திரங்கள் ரத்தாகும்

(கொழும்பு)

பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்ட மது பானசாலை அனுமதிப்பத்திரங்கள் அதிக விலைக்கு விற்பனை செய்யப்பட்டால் அவற்றின் உண்மைத் தன்மை ஆராயப்பட்டு குறித்த அனுமதிப்பத்திரங்கள் இடைநிறுத்தப்படும் என மதுவரித் திணைக்களம் தெரிவித்துள்ளது.

ஆளுங்கட்சி மற்றும் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் பலர் மதுபானசாலை அனுமதிப்பத்திரங்களைப் பெற்று 5 கோடி ரூபாய்க்கு விற்பனை செய்துள்ளதாக முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.

நாட்டில் புதிதாக 478 மதுபானசாலைகளை அமைப்பதற்கு புதிய நிபந்தனைகளின் கீழ் மதுபான உரிமங்களை வழங்குவதற்கான அரசின் தீர்மானத்துக்கு அமைய இந்த நடவடிக்கை இடம்பெறுவதாகவும் மதுவரித் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

ஆகவே, இவ்வாறான சம்பவம் முறைப்பாடு செய்யப்படும் பட்சத்தில் மதுவரித் திணைக்களம் உரிய சட்டங்களை நடைமுறைப்படுத்துவதாக மதுவரித் திணைக்களத்தின் ஆணையாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.

எந்தவொரு தரப்பினரும் மதுபானசாலை உரிமத்தினை விற்பனை செய்ய விரும்பினால் அவர்கள் 15 மில்லியன் ரூபாயினை அரசுக்கு செலுத்துவதன் மூலம் இதனைச் செயற்படுத்த முடியும் என மதுவரித் திணைக்களத்தின் ஆணையாளர் நாயகம் மேலும் தெரிவித்துள்ளார் (நி-6)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | நெல்லியடி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 150 | 150 | 100-140 | 200 |
| உருளைக்கிழங்கு | 180 | 200 | 180 | 200 |
| பச்சைமிளகாய் | 120 | 80 | 100-120 | 150 |
| தக்காளி | 300 | 200 | 160-180 | 300 |
| மரவள்ளிக்கிழங்கு | 120 | 140 | 100 | 200 |
| கோவா | 250 | 250 | 150 | 300 |
| கரட் | 300 | 450 | 200 | 400 |
| பூசணி | 100 | 80 | 80-120 | 100 |
| புடோல் | 200 | 280 | 130 | 300 |
| வாழைக்காய் | 100 | 100 | 80-100 | 200 |
| சின்ன வெங்காயம் | 300 | 300 | 200-350 | 350 |
| பெரிய வெங்காயம் | 250 | 250 | 250 | 250 |
| பாகற்காய் | 600 | 600 | 400 | 500 |
| வெண்டக்காய் | 150 | 200 | 200 | 300 |
| கருணைக் கிழங்கு | 100 | 150 | -- | 200 |
| பயற்றங்காய் | 300 | 400 | 350-450 | 150 |
| லீக்ஸ் | 320 | 500 | 300 | 400 |
| பீற்றூட் | 400 | 350 | 300 | 450 |
| கறிமிளகாய் | 200 | 200 | 250 | 300 |
| முருங்கைக்காய் | 800 | 900 | 500-700 | 1000 |
| போஞ்சி | 600 | -- | 350 | 600 |
| கத்தரிதம்புள்ள | 120 | 100 | -- | 180 |
| கீரை - 1 பிடி | 120 | 150 | 50-70 | 150 |
| தேசிக்காய் | 1000 | 1400 | 800-1200 | 1400 |
| தேங்காய் (ஒன்று) | 120 | 110 | 60-110 | 80-120 |
| இராசவள்ளி | 350 | 400 | 250 | 400 |
| வெங்காயப்பூ | 600 | 500 | -- | 600 |
| முள்ளங்கி | 200 | 100 | 70 | 300 |
| பொன்னாங்காணி | 80 | 80 | 80 | 60 |
| வல்லாரை | 60 | 40 | 80 | 80 |
| சரப்பலா | -- | -- | 80 | -- |

# இன்று ஒரு தகவல் 135



தென்கச்சி கோ.சுவாமிநாதன்

## வாழ்க்கை நாடகம்

இந்த உலகம் ஒரு நாடக மேடை அதிலே நாம் எல்லோரும் நடிகர்கள் என்று பெரியவர்கள் எல்லாம் சொல்லியிருக்கிறார்கள். இப்போது உலகம் போற போக்கைப் பார்த்தால் அது நூற்றுக்கு நூறு உண்மை என்பது நன்றாகப் புரிகிறது. ஏன் என்றால் இப்போது யாருமே உண்மையாக நடந்து கொள்வதாகத் தெரியவில்லை!

எல்லோருமே ஏதோ ஒரு விதத்திலே நடித்துக் கொண்டு தான் இருக்கிறார்கள். அதுவும் இந்த நாடகத்திலே வில்லன்கள் தான் அதிகம். ஆனால் அவர்கள் எல்லாம் தங்களை கதா நாயகர்களாக நினைத்துக் கொண்டு இருக்கிறார்கள். அது தான் பரிதாபம். இந்த உலகம் ஒரு நாடகமேடை என்று பெரியவர்கள் சொன்னதற்கு அர்த்தம் வேறு. அது வேதாந்தம்.

வாழ்க்கை என்னும் நாடகத்திலே நாம் ஆரம்பத்திலே இருந்து கடைசி வரைக்கும் ஒரே பாத்திரமாக இருப்பதில்லை. பலவிதமான பாத்திரங்களை ஏற்க வேண்டியிருக்கிறது. ஒரு நாடகத்திலே நடிக்கும் போது என்ன வேடம் போட்டுக் கொள்கின்றோமோ அதற்குத் தகுந்த மாதிரி நடந்து கொள்ள வேண்டும் இல்லையா?

ராஜா வேடம் போட்டுக் கொண்டு சேவகன் மாதிரி நடந்து கொள்ளக் கூடாது. அதே மாதிரி வாழ்க்கையிலேயும் நாம் ஏற்றுக் கொண்டிருக்கின்ற பாத்திரத்திற்குத் தகுந்த மாதிரி நடந்து கொள்ள வேண்டும்.

அது தெரியாததனாலே தான் பல பேர் நிம்மதி இல்லாமலே அவஸ்தைப்பட்டுக்கொண்டு இருக்கின்றோம். இப்போது வாழ்க்கையிலே நேரத்திற்கு நேரம் வெவ்வேறு பாத்திரமாக மாறிக் கொண்டே இருக்கின்றோம். இப்போது உதாரணத்திற்கு ஒருவரைப் பார்ப்போமே! காலையிலே அலுவலகத்திற்கு போகின்றவரைக்கும் அவர் ஒரு மனைவியின் கணவர், குழந்தையின் அப்பா. அங்கே போன பின்பு அவர் ஒரு உத்தியோகத்தர். கணவர், அப்பா என்கின்ற வேடம் எல்லாம் கலைத்து அவர் உத்தியோகத்தர் என்ற பாத்திரத்தை ஏற்றுக் கொள்கின்றார். அலுவலகத்திற்கு போன பின்பு அங்கே இருக்கின்றவர்களிடம் எல்லாம் நான் உங்கள் அப்பா, தாத்தா என்று சொல்லிக் கொண்டு இருக்கக் கூடாது. உத்தியோகத்தர் வேடத்திலே இருந்து கொண்டு அப்பா மாதிரி நடந்து கொள்ளக் கூடாது.

மகனே நான் கொடுத்த விடயம் டைப் ஆகிவிட்டதா என்று கொஞ்ச ஆரம்பித்தால்... போப்பா உனக்கு வேறே வேலை இல்லை என்று சொல்லிவிட்டு போய் விடுவார். அது மட்டுமில்லை போவதற்கு முன்னாடி சினிமா பார்ப்பதற்கு காசு கொடு என்று கேட்டாலும் கேட்பார். இவர் அப்பா மாதிரி நடந்து கொள்ளும் போது அவர் மகன் மாதிரி நடந்து கொள்ளக் கூடாதா? வாழ்க்கையிலே நாம் குழப்பம் அடைவதற்கு காரணம் என்ன என்று நினைக்கிறீர்கள்?

எந்த பாத்திரத்திலே இருக்கின்றோமோ அதற்கு தகுந்த மாதிரி நடந்து கொள்ளாததனாலே தான்! அலுவலகத்தை விட்டு மாலை நேரம் வீட்டுக்கு திரும்பியவுடனே மறுபடியும் கணவனாகவும் அப்பாவாகவும் மாறிவிட வேண்டும். ஆனால் அப்படி பலபேர் மாறுவதில்லை.

அங்கேயும் உத்தியோகத்தர் மாதிரி நடந்து கொள்ள ஆரம்பிக்கிறது. பின்பு வசமாக வாங்கிக் கட்டிக்கொண்டு அவஸ்தைப்படுவது. இது எல்லாம் எதனாலே?

வேடத்துக்குத் தகுந்தாற் போல் நடந்து கொள்ளத் தெரியாததால் தான்! ஏங்க நீங்க பெரிய உத்தியோகத்தர் தான்! இல்லை என்று சொல்லவில்லை மாலை வீட்டுக்குப் போறீங்க. உங்கள் மனைவி வீட்டுக்கு வேண்டிய பொருட்கள் எல்லாம் என்ன என்னென்று சொல்லுகிறார். அதை வாங்கிக் கொண்டு வந்து கொடுக்க வேண்டியது தானே! அதைவிட்டுட்டு இதோ பாரு நீ இப்படியெல்லாம் ஓரலாக சொல்லாதே எல்லாத்தையும் டைப் பண்ணி ஃபைல்லே போட்டுக் கொண்டுவா என்று சொன்னால் வாங்கிக் கட்டிக்காமல் வேறு என்ன செய்வீங்க?

வீட்டுக்கு திரும்பிய பின் கணவனாகவோ அப்பாவாகவோ மாறாமல் உத்தியோகத்தராக இருக்கின்ற பல பேர் இருக்கின்றார்கள். வீட்டுலே இருப்பவர்கள் மேலே சிடுசிடு என்று விழுவது. மனைவி, குழந்தைகளிடம் வருவதற்கு பயந்து ஒதுங்குகின்ற நிலைமை. உங்களுக்கும் கஷ்டம். அவர்களுக்கும் கஷ்டம். உங்களுடைய உண்மையான பாத்திரம் பிரம்மம் அல்லது ஆத்மா. உங்களுக்கு உடம்பு, மனம் இருக்கிறது. ஆனால் நீங்கள் உடம்போ மனமோ இல்லை! இந்தப் பாத்திரத்திற்கு ஏற்ற மாதிரி நடந்து கொள்ள வேண்டும் என்றால் அதற்கு பயிற்சி தேவை. பயிற்சிக் காலத்திலே பல கட்டுப்பாடுகள் இருக்கத் தான் செய்யும்.

கார் ஓட கற்றுக் கொள்ள வேண்டும் என்றால் கூட கட்டுப்பாடு இருக்கவில்லை. அது மாதிரி கார் ஓட கற்றுக் கொண்ட பின்பு நீங்கள் காரிலேயே உட்கார்ந்து இருக்க வேண்டும் என்பது இல்லை. எங்கே வேண்டும் என்றாலும் சுற்றலாம். அதே மாதிரி உங்கள் ஆன்மிக பயிற்சி முடிந்தவுடனே நீங்கள் உலக காரியங்களிலே பங்கெடுத்துக் கொள்ளலாம். அப்போது உலகம் உங்களோடு ஒட்டியிருக்காது.

பாத்திரத்திற்கு ஏற்ற மாதிரி நடிக்க வேண்டியதைப் பற்றி இது வரைக்கும் பேசிக் கொண்டு இருந்தோம். காசுக்குத் தகுந்த மாதிரி நடிக்கிறதை பற்றி கேள்விப்பட்டு இருக்கிறீர்களா?

வில்லியம் கில்லெட் என்று அமெரிக்க நடிகர் ஒருவர். சின்ன வயதிலே நாடகக் கம்பெனியில் சேர்ந்து நடித்துக் கொண்டு இருந்தார். ஒரு நாடகத்திலே இவர் சாகப் போகிற மாதிரி ஒரு காட்சி. இவர் நடித்தார். நாடகக் குழு நிர்வாகிக்கு இவருடைய நடிப்பிலே திருப்தி இல்லை. என்ன சார் சாகப் போற மாதிரி நடிக்க வேண்டிய நீங்கள் அந்த சமயத்திலே சிரித்து வேறு தொலைக்கிறீர்களே! சுத்த மோசம் என்றார்.

அதற்கு அந்த நடிகர்: நீங்க கொடுக்கின்ற சம்பளத்தைப் பார்த்தால் அதை வாங்கிப் பிழைப்பதை விட இப்படி சிரித்துக் கொண்டே சாகிறது எவ்வளவோ மேல்! இல்லையா? என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வர்த்தகத் துறை மாணவர்களுக்கான உயர்கல்வி வாய்ப்புக்கள் ஓர் பார்வை

முகாமைத்துவ கற்கைகள் வணிக பீடம்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இலங்கை.

இந்த போட்டி நிறைந்த தொழில் சந்தையில், தொழில்முறை தகுதிகளைப் பெறுவதன் ஊடாக தொழில் வாய்ப்புகளைக் கணிசமாக மேம்படுத்தலாம். அத்துடன் பரந்த அளவிலான வேலை வாய்ப்புகளுக்கான கதவுகளும் திறக்கும். இலங்கையிலுள்ள வணிகத் துறை சார் மாணவர்களுக்கான முக்கிய மான தொழில்சார் தகமைக் கற்கை நெறிகளாக பின்வருவன வற்றைக் குறிப்பிட முடியும்.

பட்டயக் கணக்காளர் என்பது கணக்கியல் மற்றும் நிதித் துறையில் மிகவும் மதிப்புமிக்க மற்றும் விரும்பப்படும் தகுதிகளில் ஒன்றாகும். இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனம் பட்டய கணக்காளர் தகுதியை வழங்குகிறது. இது உள்நாட்டிலும் சர்வதேச அளவிலும் அங்கீகரிக்கப்பட்டுள் ளது. இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனமானது மாணவர்களுக்கு கணக்கியல், கணக்காய்வு, வரிவிதிப்பு மற்றும் நிதி ஆகியவற்றில் ஆழ்ந்த அறிவு மற்றும் நடைமுறை திறன்களை வழங்கி அவர்களை சிறப்பாகத் தயார்படுத்துகின்றது. பட்டயக் கணக்காளர் தகுதி மற்றும் பொருத்தமான நடைமுறை அனுபவத்தைப் பெற்றவுடன் தனிநபர்கள் கணக்காய்வாளர், வரி ஆலோசகர், நிதி ஆய்வாளர் போன்ற பதவிகளை வகிக்கலாம் அல்லது தங்கள் சொந்த கணக்கியல் நிறுவனங்களை நிறுவலாம்.

இலங்கை சான்றளிக்கப்பட்ட முகாமைத்துவ கணக்காளர்கள் நிறுவனம் சான்றளிக்கப்பட்ட முகாமைத்துவ கணக்காளர் தகுதியை வழங்குகிறது. இது முகாமைத்துவக் கணக்கியல், மூலோபாயத் திட்டமிடல் மற்றும் முடிவெடுத்தல் ஆகிய பரப்புக்களில் கவனம் செலுத்துகிறது. இலங்கை சான்றளிக்கப்பட்ட முகாமைத்துவ கணக்காளர்கள் நிறுவனமானது மாணவர்களை முகாமைத்துவக் கணக்கியல், செலவுக் கணக்கியல், வரவு செலவுக் கணக்கு மற்றும் செயற்திறன் முகாமைத்துவம் ஆகியவற்றில் தயார்படுத்துகின்றது. சான்றளிக்கப்பட்ட முகாமைத்துவ கணக்காளர் தகமை பெற்றவர்கள் பெரும்பாலும் நிர்வாகக் கணக்காளர்கள். நிதிக் கட்டுப்பாட்டாளர்கள் அல்லது முகாமைத்துவ ஆலோசகர்கள் என நிறுவன மற்றும் பொதுத்துறைகளில் பணியாற்ற வாய்ப்புக்கள் உள்ளன.

பட்டய சான்றளிக்கப்பட்ட கணக்காளர்கள் சங்கம் என்பது பட்டய சான்றளிக்கப்பட்ட கணக்காளர் தகுதியை வழங்கும் உலகளாவிய அங்கீகாரம் பெற்ற தொழில்முறை கணக்கியல் அமைப்பாகும். இந்தக் கற்கை நெறியானது பரந்த அளவிலான கணக்கியல், நிதி மற்றும் வணிகத் தலைப்புகளை உள்ளடக்கியது. பட்டய சான்றளிக்கப்பட்ட கணக்காளர்தகமை பெற்றவர்கள் கணக்காளர், கணக்காய்வாளர், நிதி ஆய்வாளர் மற்றும் சர்வதேச நிறுவனங்கள், பொதுக் கணக்கியல் நிறுவனங்கள் மற்றும் அரச நிறுவ னங்களில் நிதி முகாமையார்களாக பணியாற்ற வாய்ப்புக்கள் உள்ளன.

வரி விதிப்பில் நிபுணத்துவம் பெற ஆர்வமுள்ள மாணவர்களுக்கு, பட்டய வரிவிதிப்பு நிறுவனம் வரி விதிப்புச் சட்டங்கள் மற்றும் நடைமுறைகளில் கவனம் செலு த்தும் தொழில்முறை தகுதிகளை வழங்குகிறது. வருமான வரி, கம்பனி வரி, சர்வதேச வரிவிதிப்பு மற்றும் வரி திட்டமிடல் போன்ற துறைகளில் நிபுணத்துவம் பெற்ற மாணவர் களை இந்த நிறுவனம் தயார்ப்படுத்துகின்றது. பட்டய வரி விதிப்பு நிறுவனத் தகமை பெற்ற வர்கள் பெரும்பாலும் வரி ஆலோச கர்கள் அல்லது வரி முகாமை யாளர்களாக கணக்கியல் நிறுவ னங்கள், சட்ட நிறுவனங்கள் அல் லது சிக்கலான வரி கட்டமைப்புகளைக் கொண்ட சர்வதேச நிறுவனங்களில் பணியாற்ற வாய்ப்புக்கள் உள்ளன.


முகாமைத்துவ கணக்காளர்கள் பட்டய நிறுவனமானது பட்டய முகாமைத்துவக் கணக்காளர் தகைமையை வழங்குகிறது, இது முகாமைக் கணக்கியல், மூலோ பாயத் திட்டமிடல் மற்றும் வணிகப் பகுப்பாய்வு ஆகிய பரப்புக்களில் அதிக கவனம் செலுத்துகின்றது. முகாமைத்துவ கணக்காளர்கள் பட்டய நிறுவன மாணவர்கள் நிதி முகாமைத்துவ, இடர் முகாமைத்துவ மற்றும் தந்திரோபாய முடிவெ டுப்பதில் திறன்களைக் கொண்டுள் ளதுடன் அவர்கள் நிதி மற்றும் வணிக நிர்வாகத்தில் தலைமைப் பதவி நிலைகளுக்குத் தயார்படுத் தப்படுகின்றனர். பட்டய முகாமைத்துவக் கணக்காளர் தகமை பெற்றவர்கள் பொதுவாக நிதிக் கட்டுப்பாட்டாளர் கள், நிதி முகாமையாளர்கள் வணிக ஆய்வாளர்கள் மற்றும் பல்வேறு தொழில்களில் முகாமைத் துவ ஆலோசகர்கள் போன்ற பதவி நிலைகளில் பணியாற்ற வாய்ப்புக்கள் உள்ளன.

இலங்கையில் உள்ள வணிகத் துறைபிரிவு மாணவர்கள், தமது உயர்தரப் பரீட்சைகளை நிறைவு செய்தவுடன் பல்வேறு வகையான தொழில் பாதைகளைத் தெரிவு செய்து நன்மையைப் பெற முடியும். தொழில் முறைத் தகமைக ளைப் பெறுவதன் மூலம், மாண வர்கள் தங்கள் வேலைவாய்ப்பை மேம்படுத்த முடியும் அத்துடன் கணக்கீடு மற்றும் கணக்கியல், நிதி, வரிவிதிப்பு மற்றும் முகாமைத்துவம் ஆகிய பரப்புக்களில் தங்கள் அறிவை மேம்படுத்தலாம். மேலும், இந்தத் தகமைகள் தொழில் முன்னேற்றம், தொழில் முறை மேம்பாடு மற்றும் சர்வதேச அங்கீகாரம் ஆகியவற்றுக்கான வாய்ப்புகளையும் வழங்குகின்றன, தனிநபர்கள் அவர்கள் தேர்ந்தெடுத்த துறைகளில் சிறந்து விளங்கவும் இலங்கையின் பொருளாதார வளர்ச்சிக்குப் பங்களிப்புச் செய்யவும் இவை உதவும்.

**வர்த்தகத் துறைசார் மாணவர்களுக்கான தொழில் வாய்ப்புக்கள்**

வர்த்தகத் துறைசார் மாணவர்களுக்கு உலகளாவிய ரீதியில் பொதுவாக தொழில் வாய்ப்புக்கள் மிக அதிகமாகக் காணப்படுவது குறிப்பிடத்தக்கது. அண்மையில் நடாத்தப்பட்ட ஆய்வொன்றில் இலங்கையில் அரச பல்கலைக்கழகங்களில் முகாமைத்துவத்தில் கல்வி கற்ற 74 வீதமான மாணவர்கள் தமது பல்கலைக் கழக கல்வியை நிறைவு செய்து ஆறு மாதகாலத்தினுள் தமக்கான வேலையினைப் பெற்றுக் கொள்வதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

வர்த்தகத் துறையில் கல்வி கற்றுப்பட்டம்பெற்ற மாணவர்கள்பல உயர் பதவிகளினை அலங்கரித்துக் கொண்டிருக்கிறார்கள். உதாரணமாக இலங்கை மத்திய வங்கியிலான உயர் பதவிகள், அரச மற்றும் தனியார் வங்




கிகளில் உயர் பதவிகள், கணக்காளர்கள் மற்றும் கணக்காய்வாளர்கள், அரச நிர்வாக சேவையில் உயர் பதவிகள், விரிவுரையாளர்கள், ஆலோசகர்கள், கல்வித்துறையில் உயர் பதவிகள், ஆசிரியர்கள், அரச திணைக்க ளங்களில் பல்வேறு பதவிகள், மற்றும் தனியார் துறையில் பல உயர் பதவிகள் என்பனவற்றை இவர்கள் வகிக்கின்றார்கள்.

**முடிவுரை**

மாணவர்கள் தமது உயர் கல்விக்கான துறையைத் தெரிவு செய்யும் போது பூரணமான தகவல்களைப் பெற்று அவற்றின் அடிப்படையில் தமக்கு மிகவும் பொருத்தமான துறையினைத் தெரிவு செய்தல் அவசியமானதாகும். அவர்களி னது எதிர்கால வாழ்க்கையின் வெற்றியினைத் தீர்மானிப்பதில் இந்தத் தெரிவானது மிக முக்கிய பங்காற்ற வல்லது என்பதனைக் கவனத்தில் கொள்ளுதல் வேண்டும். மாறாக இவை பற்றிய தேவையான தகவல்களை அறிந்து கொள் ளாமல் தமது சகபாடிகளுடன் இணைந்து அவர்களது விருப்பங்களுக்கேற்ப உயர் கல்வித் துறையைத் தெரிவு செய்யும் தவறான போக்கினை சில மாணவர்கள் மத்தியில் அவதானிக்க முடிகின்றது.

இதன் காரணமாக அவர்களது தொழில் தொடர்பான எதிர்காலம் சிக்கலானதாக மாறுகின்றது குறிப்பாக உயர்கல்வி ஒன்றினை தேர்வு செய்யும் போது உயர் கல்வியில் உள்ள வேலை வாய்ப்புகள் அவற்றுடன் தொடர்புடைய வருமானம் மற்றும் தொழில் அபிவிருத்திகள் போன்றன கருத்தில் கொள்ளப்படுதல் வேண்டும். மாணவர்களாகிய ஒவ்வொருவரும் தங்களது திறன்கள் மற்றும் அறிவு போன்றவை மற்றவர்களில் இருந்து வேறுபடுகின்றது என்பதனை உணர்ந்து அதற்கேற்ற விதத்தில் தமக்குப் பொருத்தமான கல்வித் துறையினைத் தேர்வு செய்து அதன் மூலம் சிறந்த தொழிலைத் தேட வேண்டியது மிகவும் அவசியமானது ஆகும்.

வர்த்தகத்துறையில் கல்வி கற்கும் மாணவர்களுக்கான உயர் கல்விச் சந்தர்ப்பங்கள் இலங்கையில் உள்ள பல்கலைக்கழகங்களில் பரந்து விரிந்து காணப்படுகின்றன. இலங்கையில் வர்த்தகத் துறை மாணவர்களுக்கான முழுநேரக் கற்கை நெறிகளுக்காக பல்கலைக் கழகங்கள் உள்ளடங்கலாக 17 அரச நிறுவனங்கள் பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக் குழுவின் கீழ் இயங்குகின்றன.

இவை பொருளாதாரத்திற்கு முதுகெலும்பாக இருக்கும் வர்த்தகத் தொழில்துறையையும் அதனோடு இணைந்த தொழில்துறையையும் இயக்குவதற்குத் தேவையான ஆளணியினரை உருவாக்குவதற்காக வர்த்தகத்துறை மாணவர்களுக்கு அரிய சந்தர்ப்பங்களை வழங்குகின்றன. இவற்றுக்கு மேல திகமாக தனியார் பல்கலைக் கழகங்கள், இலங்கை திறந்த பல்கலைக்கழகம், உயர் தொழில் நுட்பவியல் நிறுவனங்கள், தொழில் நுட்பக் கல்லூரிகள் என்பனவும் பல்வேறு கற்கை வாய்ப்புக்களை வழங்குகின்றன.

அத்துடன் பல் வேறு தொழில் சார் தகமைக் கற்கை வாய்ப்புக்களும் உள்ளன. எனவே மாணவர்கள் இந்த வாய்ப்புக்களை இறுகப் பற்றி சரியானதும் தமக்குப் பொருத்தமானதுமான உயர்கல்வித் துறையைத் தெரிவு செய்து தமது வாழ்வுக்குச் செழுமை சேர்ப்பதுடன் தமது சமூ கத்துக்கும் எமது நாட்டின் பொரு ளாதாரத்துக்கும் வளம் சேர்க்க ஊக்கமளிப்போம்.

(முற்றும்.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனித நேயத்துடன் மக்களின் உணர்வை புரிந்து கொண்டால், தனது மரியாதை தானே உயரும்.

– யாரோ

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## தூதுவருக்குரிய இயல்பை இழந்துவிட்ட எரிக் சொல்ஹெய்ம்

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இலங்கை அரசாங்கத்துக்கும் இடையில் சமாதானப் பேச்சுவார்த்தை இடம்பெற்றபோது அதற்கான சிறப்புத் தூதுவராக எரிக் சொல்ஹெய்ம் செயற்பட்டார்.

நோர்வே நாட்டைச் சேர்ந்த எரிக் சொல்ஹெய்மின் சமாதான முயற்சிகளுக்கு விடுதலைப் புலிகள் ஒத்துழைப்பு வழங்கினர்.

எனினும் குறித்த சமாதானப் பேச்சுவார்த்தை தோல்வியில் முடிந்து போனது.

சமாதானப் பேச்சுவார்த்தை தோல்வியில் முடிந்துபோனமை தொடர்பில் சிறப்புத் தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் மௌனமாகவே இருந்தார்.

மிகுந்த எதிர்பார்ப்பைக் கொண்டிருந்த சமாதானப் பேச்சுவார்த்தை தோல்வியில் முடிந்துபோனமை குறித்து தனது கருத்தை தூதுவர் என்ற அடிப்படையில் எரிக் சொல்ஹெய்ம் முன்வைத்திருக்க வேண்டும். ஆனால் அவர் அதைச் செய்யவில்லை.

பரவாயில்லை. ஒரு நடுநிலைத் தூதுவர், தோல்வியில் முடிந்துபோன சமாதான முயற்சி குறித்து மௌனம் சாதிப்பது ஏற்புடையது. அந்த மௌனம் நிறைந்த உட்பொருளைக் குறிக்கவல்லது.

உதாரணத்துக்கு சமாதான முயற்சியின் தோல்வி தூதுவர் எரிக் சொல்ஹெய்மை கடுமையாகப் பாதித்திருந்தமையால், அவர் மௌனம் சாதித்தார் என்று கூடக் கருத இடமுண்டு.

அந்த வகையில், எரிக் சொல்ஹெய்மின் மௌனத்தை அனைவரும் ஏற்றுக் கொண்டனர்.

ஆனால் வன்னிப் பெருநிலப்பரப்பில் மிகப் பெரும் போர் நடந்து அதில் அப்பாவித் தமிழ் மக்கள் கொல்லப்பட்டபோதும் தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் ஒரு வார்த்தை தனிலும் பகன்றாரில்லை.

சரி, சமாதான முயற்சி தோல்வியடைந்த பின்னர், தனது தூதுவர் என்ற பொறுப்பு இயல்பாக நீங்கி விட்டதன் காரணமாக அவர் வாய்திறக்கவில்லை என்று கூட அர்த்தப்படுத்தலாம்.

ஆனால் போர் முடிந்து 15 ஆண்டு கடந்த பின்னர் இப்போது எரிக் சொல்ஹெய்ம்; விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனின் தீர்மானங்களே யுத்தத்துக்கு வழிவகுத்ததென்றும் இறுதி மூன்று வருடங்களில் தலைவர் பிரபாகரனின் பிழையான தீர்மானங்களே இறுதிக்கட்ட யுத்தத்துக்கு இட்டுச் சென்றதெனவும் கூறியுள்ளார்.

இங்குதான் எரிக் சொல்ஹெய்ம் ஒரு நடுநிலையான தூதுவர் அல்ல என்பது வெளிப்படுத்தப்படுகிறது.

உண்மை. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு காலநிலை சார்ந்த ஆலோசகராக நியமனம் பெற்ற எரிக் சொல்ஹெய்ம் செஞ்சோற்றுக் கடன் தீர்ப்பதற்காக, புலிகளின் தலைவர் பிரபாகரன் எடுத்த பிழையான தீர்மானங்களாலேயே இறுதி யுத்தம் நடந்ததாகக் கூறியுள்ளார்.

இவ்வாறு கூறுவதன் மூலம் தமிழ் மக்களுக்கான வெளிநாட்டு ஆதரவை முறியடிக்க, எரிக் சொல்ஹெய்ம் செய்த கபடத்தனமே அவரின் மேற்போந்த கருத்து எனப் பொருள் கொள்வதில் எந்தத் தவறுமில்லை.

# ஜனாதிபதிக்கு இடையூறு விளைவித்தால் நாடு மோசமான நிலைக்குச் செல்லும்

## வஜிர அபேவர்தன எம்.பி

நாட்டில் பொருளாதார ஸ்திரத்தன்மையை ஏற்படுத்துவதற்காக ஜனாதிபதி முன்னெடுத்துவரும் வேலைத்திட்டங்களுக்கு இடையூறு விளைவித்தால் நாடு மிகவும் மோசமான நிலைக்கு செல்லும் என பாராளுமன்ற உறுப்பினர் வஜிர அபேவர்தன தெரிவித்துள்ளார்.

காலியில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்தபோதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

தேர்தல் தொடர்பாக எவரும் குழப்பமடையத் தேவையில்லை. ஒக்டோபர் மாதம் 17 ஆம் திகதிக்கு முன்னர் ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்படும்.

இந்த நாடு பொருளாதார வங்குரோத்து நிலை யில் இருந்து இன்னும்முழுமையாக விடுபடவில்லை.

இந்த நாட்டில் அரசியல் ஸ்திரத்தன்மை முக்கியமாகும். எனவேதான் நாடு நெருக்கடியை எதிர்கொண்ட சந்தர்ப்பத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் அனைத்து கட்சிகளின் தலைவர்களும் ஜனாதிபதியாகத் தெரிவு செய்தார்கள்.

ஆட்சியாளர்கள் எவரையும் குறை கூறாமலேயே ஜனாதிபதியாக அவர் அப்போது நாட்டைப் பொறுப்பேற்றார். அவர் இந்த நாட்டை பொறுப்பேற்றதன் பின்னர் இந்த நாடு நெருக்கடி நிலையில் இருந்து கட்டம் கட்டமாக மீட்டெடுக்கப்பட்டுள்ளது.

உலகில் எந்தவொரு நாடு வெகுசுலபமாக பொருளாதார நெருக்கடியில் இருந்து மீண்டெழுந்ததில்லை. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இந்த நாட்டை பொறுப்பேற்றிருக்காவிட்டால் நாட்டை வீழ்ச்சிப் பாதையில் இருந்து மீட்டெடுத்திருக்க முடியாது.

நாட்டில் பொருளாதார ஸ்திரத்தன்மை இல்லாது போவது மாத்திரமன்றி அரசியல் ஸ்திரத்தன்மையும் இல்லாது போகும். ஜனாதிபதி முன்னெடுத்துவரும் வேலைத்திட்டங்களுக்கு இடையூறு விளைவித்தால் நாடு மிகவும் மோசமான ஒரு நிலைக்கு செல்லும் என்பதை அனைவரும் நினைவில்கொள்ள வேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் வஜிர அபேவர்தன தெரிவித்தார்.

(ம-7,10)

# அரச நிகழ்வுகளை தேர்தல் பரப்புரை மேடையாக்காதீர்

## ரணில் முன்னிலையில் சுமந்திரன் எம்.பி

(கிளிநொச்சி)

அரச வைத்தியசாலை கட்டடம் திறத்தல், காணி உறுதி வழங்கல் போன்றவை அரச நிகழ்வுகள். அந்த நிகழ்வு மேடைகளை தேர்தல் பிரசாரத்துக்கான தளமாக்கிக் கொள்ளாதீர்கள் என இலங்கைத் தமிழரசுக் கட்சியின் யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

குறித்த விடயத்தை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவையும் வைத்துக் கொண்டு நேற்று கிளிநொச்சி மாவட்டத்தில் பங்குபற்றிய இரண்டு நிகழ்வுகளில் உரையாற்றும்போது அவர் இவ்வாறு இடித்துரைத்துள்ளார்.

இந்த இரண்டு நிகழ்வுகளிலும் ரணில் முன்னிலையில் உரையாற்றிய சுமந்திரன் எம்.பி. அங்கு கூறிய முக்கிய விடயங்களின் சாராம்சம் வருமாறு

இவை அரச நிகழ்வுகள். இங்கு பலரினதும் உரைகள் இவற்றைத் தேர்தல் பிரசார மேடையாக்கும் போக்கில் தென்படுவது மன வருத்தத்துக்குரியது.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையைத்தேசிய வைத்தியசாலையாக மாற்றும் ரணிலின் அறிவிப்பை வரவேற்கிறோம்.

ஏற்கனவே அது போதனா வைத்தியசாலை என்ற முறையில் மத்திய அரசுக்குக் கீழேயே உள்ளது. அதை மத்திய அரசு கையாள்வது வரவேற்கத்தக்கதே.

ஆனால், கல்வியும் சுகாதார வைத்தியத்துறையும் மாகாணத்துக்குப் பகிரப்பட்ட விடயங்கள். தேசிய பாடசாலை என்ற பெயரில் பாடசாலைகளை மத்திய அரசின் கீழ் மாற்றுவது, வைத்தியசாலைகளை நேரடியாக மத்திய அரசு நிர்வாகத்தின் கீழ் எடுப்பது எல்லாம் தவறானவை. அவற்றைச் செய்யாதீர்கள். காணி உறுதிப்பத்திரம் மக்களுக்கு வழங்கப்படுவதை வரவேற்கின்றோம்.

ஆனால், 13ஆவது திருத்தத்தின் கீழ் காணி அதிகாரங்கள் மாகாணங்களுக்குரியவை. அதனை உயர் நீதிமன்றமும் ஒரு தீர்ப்பில் அங்கீகரித்திருந்தது. எனினும், அந்தத் தீர்ப்பைச் செல்லுபடியற்றதாக்கும் தவறான தீர்ப்பு ஒன்றை அதன் பின்னர் அதே நீதிமன்றம் வழங்கியுள்ளது. அந்தத் தவறான தீர்ப்பைப் பயன்படுத்தி மாகாணங்களுக்குப் பகிரப்பட்ட காணி அதிகாரங்களை மத்திய அரசு கையாளக்கூடாது. காணி உறுதிகள் மக்களுக்கு வழங்கும் நடவடிக்கை கூட மாகாணக் கட்டமைப்புகள் மூலமே முன்னெடுக்கப்பட வேண்டும் என்றார்.

(ம-7,10)

# தேர்தல் கருத்துக் கணிப்பிற்கு இடமில்லை - பந்துல உறுதி

ஜனாதிபதித் தேர்தலை நடத்துவதற்காக மக்கள் கருத்துக்கணிப்பு பெறப்படவுள்ளதாக கூறப்படும் தகவல் முற்றிலும் உண்மைக்கு புறம்பானது என போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

கொழும்பில் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில், "நாட்டில் முதலில் ஜனாதிபதி தேர்தலே இடம்பெறவுள்ளது. ஜனாதிபதி அமைச்சரவைக்கு தெளிவாக அறிவித்துள்ளார்.

ஜனாதிபதி தேர்தலுக்கான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதையும் அவர் அறிவித்திருந்தார்.

இந்த வருடம் ஜனாதிபதித்தேர்தல் நடத்தப்படும். அதன் பின்னரே பொதுத் தேர்தல் நடத்தப்படும்.

ஜனாதிபதித்தேர்தலை நடத்துவதற்காக மக்கள் கருத்துக்கணிப்பு பெறப்படவுள்ளதாக கூறப்படும் தகவல் முற்றிலும் உண்மைக்கு புறம்பானது.

அவ்வாறான எந்தவொரு தேவையும் அரசாங்கத்திற்கு கிடையாது" என அமைச்சர் பந்துல குணவர்தன மேலும் தெரிவித்தார். (நி-6)

# சீரற்ற வானிலையால் உயிரிழப்பு அதிகரிப்பு

(கொழும்பு)

நாட்டில் நிலவும் காற்றுடன் கூடிய கடும் மழையுடனான சீரற்ற கால நிலையால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 7ஆக அதிகரித்துள்ளதாக அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

அவற்றில் 6 மரணங்கள் மரங்கள் முறிந்து விழுந்ததால் ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்தோடு, சீரற்ற கால நிலையால் இதுவரை 13 பேர் காயமடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேபோன்று 19 மாவட்டங்களில் 12,197 குடும்பங்களைச் சேர்ந்த 45 ஆயிரத்து 344 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது. (நி-6)

## சுமார் 7 இலட்சம் இலங்கையர்கள் நாட்டை விட்டு வெளியேற்றம்


(கொழும்பு)

கடந்த இரண்டு வருடங்களில் சுமார் ஏழு இலட்சம் இலங்கையர்கள் நாட்டை விட்டு வெளியேறியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

நாட்டில் நிலவும் பொருளாதார நெருக்கடி காரணமாக வாழ்க்கைச் செலவு அதிகரித்துள்ளமையே இதற்கு முக்கியக் காரணம் எனத் தெரிவிக்கப்படுகிறது. இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் தரவுகளின்படி 2022 ஜனவரி முதல் 2024 மார்ச் மாதம் வரையான காலப்பகுதியில் சுமார் 683,118 இலங்கையர்கள் சட்ட ரீதியில் வெளிநாட்டு வேலைக்காக நாட்டை விட்டு வெளியேறியுள்ளனர். (நி-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாங்குளத்தில் முதலீட்டு வலயம் ஜனாதிபதி ரணில் உறுதியளிப்பு



(கிளிநொச்சி)

கிளிநொச்சி நகரில் பாரிய முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதை அவதானிக்க முடிவதுடன், மாங்குளம் பிரதேசத்தில் முதலீட்டு வலயம் ஒன்றை உருவாக்கி அதன்மூலம் அந்தப் பிரதேசங்களை அபிவிருத்தி செய்யத் திட்டமிட்டுள்ளதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சிக்கு நேற்று விஜயம் செய்த ஜனாதிபதி மாவட்ட மக்களுக்கு காணி உறுதிகள் வழங்கும் நிகழ்வில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே இவ்வாறு தெரிவித்தார். 2017ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இந்த திட்டத்தை உரிய காலத்தில் எம்மால் முடிக்க முடியவில்லை.

ஆனால் இன்று நாம் வெற்றிகரமாக நிறைவு செய்துள்ளோம். இன்று கிளிநொச்சி நகரில் பாரிய முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதை அவதானிக்க முடிகின்றது.

மாங்குளம் பிரதேசத்தில் முதலீட்டு வலயம் ஒன்றை உருவாக்கி அதன்மூலம் இந்தப் பிரதேசங்களை அபிவிருத்தி செய்ய நாம் திட்டமிட்டுள்ளோம்.

இந்த பிரதேசத்தில் வலுசக்தித் திட்டங்களை மீள உருவாக்குவதற்கான சந்தர்ப்பம் வழங்கியுள்ளதுடன் கிளிநொச்சியில் இவ்வாறான செயற்திட்டத்தை ஆரம்பிப்பதற்கான அனுமதியும் நாம் ஏற்கனவே வழங்கியுள்ளோம். மேலும் இந்தப் பிரதேசங்களில் உள்ள காணிப் பிரச்சினைகள் மற்றும் காணாமற்போனோர் பிரச்சினை தொடர்பில் நாம் கவனம் செலுத்தியுள்ளதாக இதன் போது தெரிவித்தார். (நி-6)

NBPC EDUCATION நிறுவனத்தின் ஏற்பாட்டில் லண்டனில் வசித்து வரும் மகாலிங்கம் விஜயகுமாரின் நிதிப்பங்களிப்பில் யா/குடத்தனை அ.த.க பாடசாலையில் கல்வி பயிலும் மாணவன் ஒருவருக்கு கடந்த புதன்கிழமை துவிச்சக்கரவண்டி வழங்கி வைக்கப்பட்டது.



## அரசியல் கட்சிகளை ஓரணியில் இணையுமாறு வலியுறுத்து

(மன்னார்)

தூய்மையான அரசியலுக்காக ஒன்றிணைவோம் எனும் தொனிப்பொருளில் பவ்ரல் அமைப்பின் ஏற்பாட்டில், மன்னார் மார்ச் 12 இயக்கத்துடன் இணைந்து ஏற்பாடு செய்த மக்கள் மேடை நிகழ்வு நேற்று காலை மன்னாரில் உள்ள தனியார் விருந்தினர் விடுதியில் இடம்பெற்றது.

மார்ச் 12 இயக்கத்தின் மாவட்ட தலைவர் கொன்ஸால்வாஸ் தயாளராஜன் தலைமையில் இடம்பெற்ற குறித்த மக்கள் மேடை நிகழ்வில் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களான எஸ்.வினோ நோகராதலிங்கம் மற்றும் அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் பொது மற்றும் சிவில் சமூக அமைப்புகளின் பிரதிநிதிகள் மதத்தலைவர்கள், இளைஞர், யுவதிகள், சமூக மட்ட அமைப்புகளின் பிரதிநிதிகள் என பலர் கலந்து கொண்டிருந்தனர். இதன் போது மன்னார் மாவட்டத்தில் உள்ள பல்வேறு பிரச்சினைகள் குறித்து அரசியல் பிரதி நிதிகளின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டது.

மேலும் மாவட்டத்தில் தூய்மையான அரசியல் கலாச்சாரத்தை உருவாக்குதல் உள்ளிட்ட விடயங்கள் குறித்து கருத்துக்கள் முன்வைக்கப்பட்டது. குறிப்பாக மன்னார் மாவட்டத்தில் முன்னெடுக்கப்பட்டுவரும் காற்றாலை மின் உற்பத்தி மற்றும் கனிய மண் அகழ்வு குறித்து பாராளுமன்ற உறுப்பினர்கள் மௌனம் காப்பது குறித்து மக்களினால் கருத்துக்கள் முன்வைக்கப்பட்டதுடன் பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அரசியல் கட்சிகள் ஓரணியில் செயற்பட்டு மன்னார் மாவட்டத்தில் உள்ள பிரச்சினைகளை தீர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற கோரிக்கை முன்வைக்கப்பட்டது. (நி-6-285)

## சாய் சங்கமம்

(யாழ்ப்பாணம்)

ஸ்ரீ சத்திய சாயி பாடசாலை பழைய மாணவர் சங்கம் நடத்தும் சாய் சங்கமம் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு மானிப்பாய் ஸ்ரீ சத்திய சாயி பாடசாலை மண்டபத்தில் இடம் பெறவுள்ளது. (நி-6)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 3126

மிதிலன்




மனோ




நந்தினி





வக்சலா




துரியான்




மதுவந்தி




உங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## பாதுகாப்பு...

கைது செய்யப்பட்டனர்.

வைத்தியசாலை நிர்வாகம் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாட்டை பதிவு செய்த நிலையில் கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது. (ம-7,10,33)

## தமிழ் மக்கள்...

களுக்கு இடையில் நேற்று நடைபெற்ற கலந்துரையாடலின் பின்னரே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் உறுப்பினர்களுடனான மக்கள் சந்திப்பொன்று மட்டக்களப்பிலுள்ள தனியார் விடுதியொன்றில் நேற்று நடைபெற்றது.

மட்டக்களப்பு மாவட்ட ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் அமைப்பாளர் சந்திரகுமார் தலைமையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இந்த சந்திப்பில் கட்சியின் தேசிய அமைப்பாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான நாமல் ராஜபக்ஷ கலந்துகொண்டார்.

இதன்போது, ஒவ்வொரு ஜனாதிபதித் தேர்தலின்போதும் தமிழ் மக்களின் வாக்குகள் கொள்ளையடிக்கப்படுவதாகக் குறிப்பிட்ட நாமல் ராஜபக்ஷ, இம்முறை அவ்வாறு நடக்காமல், அறிவுபூர்வமான தீர்மானத்தை தமிழ் மக்கள் மேற்கொள்ள வேண்டும் என குறிப்பிட்டார்.

தமிழ் மக்களின் வாக்குகள் தமக்கு கிடைத்தாலும் கிடைக்காவிட்டாலும் அவர்களுக்காக பணியாற்ற தாம் தயாராக இருப்பதாக நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார். தமிழ் மக்களின் வாக்குகள் கிடைக்கப்பெறாத மகிந்த ராஜபக்ஷதான் தமிழர்களுக்காக தொடர்ந்தும் பணியாற்றியதாக அவர் மேலும் தெரிவித்தார். (ம-7,10)

## மீனவர்...

யார் விடுதியொன்றில் நேற்று இடம் பெற்றது.

வட மாகாண கடற்றொழிலாளர் இணையம் மற்றும் தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கத்தின் ஏற்பாட்டில் இக் கலந்துரையாடல் இடம்பெற்றது.

இதன்போது 10 கோரிக்கைகள் அடங்கிய மகஜர் ஒன்றும் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டது.

வடமாகாணத்தின் நான்கு மாவட்ட மீனவ பிரதிநிதிகளும் தமது மாவட்டம் சார்ந்த பிரச்சினைகளை முன்வைத்தனர். தொடர்ச்சியாக தமது பிரச்சினைகளை தமது சார்பில் பாராளுமன்றில் பேச வேண்டும் என்ற கோரிக்கையும் மீனவ பிரதிநிதிகளால் முன்வைக்கப்பட்டது.

இதன்போது பாராளுமன்ற உறுப்பினர்களான சி.சிறீதரன் மற்றும் செ.கஜேந்திரன் ஆகியோர் கலந்து கொண்டதுடன், செல்வம் அடைக்கலநாதன், எம்.ஏ.சுமந்திரன், அங்கஜன் இராமநாதன் சார்பில் பிரதிநிதிகள் கலந்து கொண்டிருந்தனர். (ம-7,10)

## கிளிநொச்சியில்...

னந்தா, முன்னாள் இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன் ஆகியோரும் இணைத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-7,10,100)

## அரிசி உற்பத்தி...

கும் நிகழ்ச்சியில் கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் கூறுகையில்,

எமது நாடானது, அரிசி உற்பத்தியில் தன்னிறைவு அடைந்துள்ளது. இதில் வன்னி, அநுராதபுரம், பொலநறுவை ஆகிய மாவட்டத்தினர் பெரும் பங்காற்றியுள்ளனர்.

எனவே, இந்த மாவட்டங்களை சேர்ந்த மக்களுக்கு காணி உரிமையை வழங்க முடிந்தமை அரசாங்கம் பெற்ற தனித்துவமான வெற்றியாகும்.

அதேவேளை, விரைவில் நவீன விவசாயம் அறிமுகப்படுத்தப்படவுள்ளதால் அதனைப் பயன்படுத்தி, போட்டித் தன்மைமிக்க விவசாயத் துறையை ஏற்படுத்த முடியும் என்று நம்புகிறேன் என்றார். (ம-7,10)

## சிங்களத்...

விடுதலை முன்னணியின் தலைவர் சுரேஸ் பிரேமச்சந்திரன், ரெலோ கட்சியின் ஊடகப்பேச்சாளர் சுரேந்திரன் குருசாமி மற்றும் ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணியில் அங்கம் வகிக்கும் கட்சியின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

தொடர்ந்து சுரேஸ் பிரேமச்சந்திரன் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்த போது,

தமிழ் மக்களின் உரிமையை பெற்றுக்கொள்ளும் பலம் மிக்க கட்சியாக ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டமைப்பு உள்ளது. கட்சியைப் பலப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை எடுத்து வருகின்றோம்

அடுத்தடுத்து தேர்தல்கள் நடைபெறவுள்ளது. தமிழ் மக்களின் உரிமையை பெற்றுக்கொள்ள தமிழ் பொது வேட் பாளரை நியமிப்பதாக கொள்கை அளவில் தீர்மானம் எடுத்திருக்கின்றோம். சிவில் சமூக அமைப்புக்களும் ஒத்துழைப்பு வழங்கவுள்ளன.

யுத்தம் முடிந்து பல பிரச்சினைகளை எதிர்நோக்கி வருகின்றோம். வருகின்ற ஜனாதிபதிகளும் பாராமுகமாக இருக்கின்றனர். சிங்களத் தலைவர்களும் வெளிநாடுகளும் புரிந்து கொள்வதற்கு பொது வேட்பாளரை நிறுத்தவுள்ளோம் என்றார். (ம-7,10)

## ஜனாதிபதித்...

வடக்கு மாகாணத்துக்கு வருகை தந்துள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, முன்னாள் முதலமைச்சரும் தற்போதைய பாராளுமன்ற உறுப்பினருமான சி.வி.விக்னேஸ்வரனை நேற்று மாலை நேரில் சந்தித்துக் கலந்துரையாடினார்.

யாழ்ப்பாணத்திலுள்ள விக்னேஸ்வரனின் இல்லத்தில் நேற்றுமாலை இந்தச் சந்திப்பு இடம்பெற்றது.

இதன் போது சமகால அரசியல் விடயங்கள் மற்றும் வடக்கின் தற்போதைய நிலைமை தொடர்பில் இருவரும் பேச்சுவார்த்தை நடத்தினார்கள்.

மேலும் ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்ப் பொது வேட்பாளர் நிறுத்தப்படுவது தொடர்பிலும் விக்னேஸ்வரனிடம் ஜனாதிபதி ரணில் கேட்டறிந்து கொண்டார். (ம-7,10,33)

## அர்த்...

உறுதிகள் வழங்கும் நிகழ்வு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நேற்றுக் காலை 11.30 மணியளவில் இரணைமடு சந்தியில் அமைந்துள்ள நெலும்பியச மண்டபத்தில் இடம் பெற்றது.

இந்நிகழ்வில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்த சுமந்திரன்,

நாங்கள் அர்த்தமுள்ள அதிகாரப் பகிர்வில் ஆர்வமாக உள்ளோம். யாழ்.போதனா வைத்தியசாலை தேசிய வைத்தியசாலையாக மாற்றப்படும் என ஜனாதிபதி யாழ்ப்பாணத்தில் அறிவித்துள்ளார். எவ்வாறாயினும், நாங்கள் அர்த்தமுள்ள அதிகாரப் பகிர்வில் ஆர்வமாக உள்ளோம்.

சுகாதாரம் மற்றும் கல்வி ஆகிய இரண்டு பகுதிகள் அரசாங்க அதிகாரம் முழுமையாக விநியோகிக்கப்பட வேண்டிய இரண்டு பகுதிகள் என்பதை நாங்கள் அறிவோம்.

குறிப்பாக யாழ்ப்பாண வைத்தியசாலையை தேசிய வைத்தியசாலையாக மாற்றுவதற்கு ஜனாதிபதி மேற்கொண்ட முயற்சிகளுக்கு நாம் நன்றி கூறுகின்றோம்.

எந்தவொரு சமூகத்தின் இருப்பிலும் சுகாதாரப் பாதுகாப்பு ஒரு அடிப்படைப் பகுதியாகும், மேலும் பெண்கள் சுகாதார சேவைகளுக்கான இந்த சிறப்பு மையத்தை உருவாக்க தங்களை அர்ப்பணித்த அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன் என எம்.ஏ.சுமந்திரன் மேலும் தெரிவித்தார். (ம-7,10)


வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378,
076 097 3127

மஹஜன சம்பத
திகதி 2024.05.25
சீட்டிழுப்பு இலக்கம் 5484
O 8 7 7 9 4 5
அத சம்பத O 7 9 4 5
சீட்டிழுப்பு இலக்கம் 59

தன நிதானய
திகதி - 2024.05.25
சீட்டிழுப்பு இலக்கம் - 1514
R 07 12 57 62 R
73768

மெகா பவர்
திகதி 25/05/2024
சீட்டிழுப்பு இலக்கம் 1832
J 18 25 32 39 55
97171

லக்கி 7 VIP
திகதி 2024.05.25
சீட்டிழுப்பு இலக்கம் 310
A 1 2 8 0 4 7 A

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3726
சீட்டிழுப்பு திகதி 25.05.2024
D 03 16 23 50
D 67310
தேசிய லொத்தர் சபை

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2024.05.25
சீட்டிழுப்பு இலக்கம் 0793
ரிஷபம் 01 06 26 52 ரிஷபம்
63132 10

உத்தியோகபூர்வ முடிவுகள்
25.05.2024 வெற்றி வாரம் 192 வர்ணம் நீலம்
L 3 0 2 3 7 0
14130 X
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 22,781,984.00
DLB

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2458 வர்ணம் நீலம் சீட்டிழுப்பு திகதி 25.05.2024
06 42 66 71 L
40378
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 89,916,944.00

சனிதா
2024.05.25 வெற்றி வாரம் 4619
28 48 56 68 Y
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 59,680,276.00
03113

ராசி
சீட்டிழுப்பு வாரம் 4170 வர்ணம் இள நீலம்
சீட்டிழுப்பு திகதி 2024.05.25 தினம் சனிக்கிழமை
45 54 55 61
ரூ. 4,296,614.40
300932

K 10 12 21 36 58
1634 சிவப்பு 25.05.2024 சனிக்கிழமை
302562
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 524,174,743.80

அட கோடீபதி ADA KOTIPATHI
சனிக்கிழமை
வெற்றி வாரம் 2284
சீட்டிழுப்பு திகதி 2024.05.25
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 115,239,611.20
10 28 46 59 E
431285


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேலைவாய்ப்பு

யாழ் நகரில் இயங்கும் ஹோட்டல் ஒன்றிற்கு
தகைமை அல்லது விருப்பம் உடையவர்கள் தேவை.

- சமையலாளர்
- சமையல் உதவியாளர்
- வரவேற்பாளர்
- துப்புரவு பணியாளர்

ஆண், பெண் இருபாலாரும் இன்றே அழையுங்கள்

(C-0455)

**070 223 3344**

## காணி விற்பனைக்கு

நல்லூர் கோவிலில் இருந்து 1 Km தொலைவில்
1 3/4 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

தரகர் தேவையில்லை

(877)

**077 439 0564**

## காணி விற்பனைக்கு

தெல்லிப்பழை நகரை அண்மித்த டச்சு வீதியில்
11/2 பரப்புகளாகப் பிரிக்கப்பட்ட, சீரமைக்கப்பட்ட
20 அடி பாதையுடன் 9 காணித்துண்டுகள்
விற்பனைக்குண்டு. (UDA,பிரதேச சபை
அனுமதி பெறப்பட்டது)

(C-0456)

**077 076 7114**

## தீபம் - யாழ் நகர்

A/L 2026

வர்த்தகப் பிரிவு | Tamil & English Medium

| | |
|---|---|
| பொருளியல் | M. லிஜிதன் |
| கணக்கீடு | V. தமிழ்ஈசன் |
| வணிகக்கல்வி | K. யதிஸ்சன் |

(870)

பாடத் தெரிவினை மேற்கொள்ள வசதியாக மாணவர்கள் இவ் மாதம் கட்டணமின்றி இலவசமாக கல்வி கற்கலாம்

புதிய பிரிவுகள் ஆரம்பம்

அனுமதிகள் வழங்கப்படுகின்றது

077 2247781

## IELTS CLASSES

கொழும்பு பல்கலைக்கழக ஆசிரியரினால்
IELTS, A1UK EXAM, ADVANCED GRAMMAR & SPOKEN ENGLISH 30% *Special offer for all the courses*

- GUARANTEED TO 7.5 in IELTS Exam.
- PASS in UK A1 Exam.
- Exam REGISTRATION CENTER.

(வாழ்க்கைத் துணையுடன் இணைவதற்கான பரீட்சை) A1 UK Exam IELTS } புதிய பிரிவுகள் ஆரம்பம்

(861)

OXFORD ENGLISH ACADEMY, Ariyakulam Junction, Jaffna.

**T.P : 077 780 3970, 074 007 1970**

## மணப் பெண் தேவை

①வடமராட்சி, இந்து, கௌரவகுலம், 1985, கார்த்திகை, MSc,Engineer,Divorce,UK மாப்பிள்ளைக்குப் பெண் தேவை

②நல்லூர் - அளவெட்டி , இந்து, கௌரவகுலம்,1984, மகம், Business Administration, Divorce, Canada மாப்பிள்ளைக்குப் பெண் தேவை.

③சுன்னாகம் - உடுவில் ,இந்து, கௌரவகுலம்,1983, புனர்பூசம், Bachelor ,Divorce, U.S.A மாப்பிள்ளைக்கு பெண் தேவை

④புலோலி , இந்து, கௌரவகுலம்,1982,சுவாதி, BSc Engineer, Divorce, Australia மாப்பிள்ளைக்கு பெண் தேவை

⑤பளை - சுழிபுரம்,இந்து,கௌரவகுலம்,1986,அத்தம், Electrician கனடா மாப்பிள்ளைக்கு பெண் தேவை

⑥பருத்தித்துறை,இந்து,கௌரவகுலம்,1987,உத்தரம்,BSc, ACMA,CGMA,Senior Financial Analyst, Canada மாப்பிள்ளைக்கு பெண் தேவை

⑦தெல்லிப்பழை ,இந்து,கௌரவகுலம்,1988,உத்தரம், BSC Civil Enigineer, Doing PHD, அமெரிக்கா மாப்பிள்ளைக்கு பெண் தேவை

⑧கரவெட்டி,இந்து,கௌரவகுலம்,1989,மிருகசீரிடம்,BSc UK மாப்பிள்ளைக்கு பெண் தேவை

⑨பருத்தித்துறை,இந்து,கௌரவகுலம்,1990,அவிட்டம்,BSC (Hons),கனடா மாப்பிள்ளைக்கு பெண் தேவை

(830)

**Phone 077 539 3728**
**Whatsapp 077 803 8193**

## வலம்புரி


விளம்பரத் தொடர்புகளுக்கு

076 636 3378 | 076 097 3127

## Happy Supermarket - உரும்பிராய்

| | | |
|---|---|---|
| 1 Kg வெள்ளை சீனி | - 274/= | Max 3Kg |
| 1 Kg Prima கோதுமை மா | - 178/= | |
| 1 Kg றவை | - 285/= | |
| 1 Kg அரிசி மா | - 200/= | |
| 1 Kg தீட்டல் பச்சை | - 178/= | |
| 1 Kg சிவப்பு பருப்பு | - 283/= | |
| 1 Kg கட்டி உப்பு | - 80/= | ~~110/=~~ |
| 330g டிகிரி மாரி பிஸ்கட் | - 270/= | ~~330/=~~ |
| 180ml Sunsilk சம்போ | - 440/= | ~~480/=~~ |
| 750ml New VSP நல்லெண்ணை | - 1450/= | ~~1550/=~~ |
| 1 Lux சோப் றோஸ் | - 145/= | ~~175/=~~ |
| 01 Baby Soap | - 115/= | ~~145/=~~ |
| 1 Sun பப்படம் | - 185/= | ~~210/=~~ |
| 400g Anlene அன்லீன் | - 1259/= | ~~1350/=~~ |

400g Anchor
995/=



~~1050/=~~

தரமான பொருட்களைசிறந்த விலையில் கொள்வனவு செய்திடுங்கள். மேலதிக விலைக்கழிவு விபரங்களிற்கு எமது Facebook:-happy basket.lk இனை நாடவும்

பலாலி வீதி,
உரும்பிராய் சந்தி.

(890)

Happy Supermarket
**0777 8080 30**

## கடை வாடகைக்கு

சுன்னாகம் சந்தைப்
பகுதியில் இரண்டு
விசாலமான கடைகள்
வாடகைக்கு வழங்கப்படும்

(874)

**076 642 1929**
**077 795 4333**

## ICT,விஞ்ஞான வகுப்புக்கள் தரம் 6-11 (T/E) மொழி மூலம்

சிறந்த கற்பித்தல் அனுபவம் கொண்ட
பிரபல பாடசாலை ஆசிரியரால்
இலகுவான முறையில் வீடுவந்து
தனிப்பட்ட முறையிலோ / குழுவாகவோ
Zoom ஊடாகவோ கற்பிக்கப்படும்.
Tamil typing,MS Office,Graphic Design
போன்றவையும் கற்பிக்கப்படுகிறது.

(857)

**070 765 9269**

## PickMe Taxi சேவை

நீங்கள் வைத்திருக்கும் அனைத்து
வகை வாகனங்களையும்
PickMe Taxi சேவையில்
இலவசமாக இணைத்து அதிக
வருமானம் பெறலாம்.

(891)

**077 473 7737**
இனை அழைக்கவும்

## வேலையாள் தேவை

இருபாலைச் சந்தி கோப்பாயில்
இயங்கும் போட்டோ கொப்பி
கடைக்கு பெண் உழியர்கள்
தேவை.அனுபவம்
உள்ளவர்களுக்கு முன்னுரிமை
வழங்கப்படும்.

(887)

**077 248 7801**

## IELTS - 25.05.2024 New Batch ஆரம்பம்

இத்துடன் Basic & Advance
Grammar Classes
இல.53, சிவகுருநாதர் வீதி,
Brown Rd, Jaffna.

077 798 9830 By:-B.MURALI

வெளிநாட்டு பல்கலைக்கழகங்களுக்கான
Student Visa மற்றும் Work Visa ஒழுங்கு
செய்து கொடுக்கப்படும். (855)

## விமலம் திருமண சேவை

யாழ்/ கனடா சர்வதேச சேவை
தங்கள் தேடுதலுக்கும் தகுதிக்கும்
ஏற்ற மணமகன் / மணமகள்
தேவையெனின் எம்முடன்
தொடர்பு கொள்ளவும். கனடா,
லண்டன், சுவிஸ், பிரான்ஸ்
மணமகன் / மணமகள் உள்ளன.

(779)

**+ 1437 244 6737, + 1647 657 1347**
[illegible]

## வீடு விற்பனைக்கு

பருத்தித்துறை,தும்பளை
அம்பிலி ஒடையில் சுற்று
மதிலுடன் 2 1/2 பரப்பு
காணியில் வீடு
விற்பனைக்கு உண்டு

(858)

**077 919 7896**

## உடனடி வேலைவாய்ப்பு

- காட்சியறை முகாமையாளர்கள்
- காசாளர்
- கணனி இயக்குனர்கள்
- களஞ்சிய பொறுப்பாளர்
- களஞ்சிய உதவியாளர்கள்
- அலுவலக உதவியாளர்கள்
- விற்பனை உதவியாளர்கள்
- கணக்கு பதியுனர்கள்

(C-448)

மேற்படி பதவிகளுக்கு பொருத்தமான ஆண் / பெண் இருபாலாரும் தங்கள் சுயவிபரத்தை கீழேயுள்ள whatsapp இலக்கத்திற்கு அனுப்பி வைக்கவும்.

**077 509 6394**

## Sky Computer

45740/=

- எம்மிடம் முதல்தர பாவனையில் மடிக்கணனிகளை பெற்றுக் கொள்ளலாம்.
- சகல வகையான கணனி உதிரிப்பாகங்களையும் பெற்றுக் கொள்ளலாம்.
- கணனி மற்றும் printer வகைகளை உத்தரவாதத்துடன் திருத்திக்கொள்ள முடியும்.

189, 1/1 KKS Road,
Jaffna town, Jaffna.
Contact :
075 069 8608
021 222 1417



(C-452)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபன [illegible] முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 26.05.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.